பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 11 செவ்வாய்க்கிழமை 28.03.2023 கதிர் 139

## இது ரகசியம் அல்ல!

2019ஆம் ஆண்டு வாக்கில் வன்னியைச் சேர்ந்த ஒருவர் எனக்கு அழைப்பு எடுத்தார். பண்டாரவன்னியனைப் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் அவர் தொடர்பான ஆதாரங்களைப் பதிவுகளை யாராவது பேணுகிறார்களா, வரலாற்றை பாதுகாக்கிறார்களா என்று பொரிந்து தள்ளினார். திடீரென இவர் ஏன் என்னிடம் இப்படிப் பாய்ந்து விழுகிறார் என்றுநினைத்துக்கொண்டே என்னவிடயம் என்று கேட்டேன்.

வன்னிக் காட்டுக்குள் பண்டார வன்னியனின் தம்மையின் சமாதி இருக்கிறதாம். அதனை வெளிப்படுத்தி உலகுக்குத் தெரியப்படுத்தி பாதுகாக்கவேண்டாமா என்று அவர் ஆதங்கப்பட்டார். எனக்கும் வரலாறு குறித்த ஆர்வக் கோளாறு இருந்த காரணத்தால் நான் வருகின்றேன் என்று சொல்லிவிட்டேன்.

அந்த மனிதரோ விட்டபாடில்லை ☞2

### வவுனியாவில்
## வடமாகாண சபையிடமிருந்து பறிபோகிறது 65 ஏக்கர் காணி

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் வவுனியாவில் உள்ள 65 ஏக்கர் காணியையும் மத்திய ஆட்சியின் வசம் கையளிக்கும்படி வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா அறிவித்துள்ளார்.

வடக்குமாகாணவிவசாய அமைச்சின் கீழ் உள்ள 65 ஏக்கர் வவுனியா விவசாய பண்ணை காணியையும் மத்திய அரசின் கீழ் கொண்டு வரும் வகையில் ஆளுனர் கடிதம் அனுப்பியுள்ளார்.

வவுனியா, ஏ9 வீதி, தாண்டிக்குளத்தில் விவசாய கல்லூரிக்கு அண்மித்ததாக விவசாய பண்ணை காணப்படுகின்றது. குறித்த விவசாய பண்ணையானது 65 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளதுடன் வடக்கு மாகாண விவசாய ☞2

## நாணய நிதிய கடன் கிடைத்துள்ளதால் தேர்தலுக்கான நிதியை விடுவிக்கலாம்
### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியக் கடனின் முதல் தொகை இலங்கைக்குக் கிடைத்துள்ளது. தேர்தல் விடயத்தில் தான் தலையிடப்போவதில்லை என்பதையும் நிதியம் உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் உள்ளூ ராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கானநிதியை ஆட்சியாளர்கள் விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

போறாவலபகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி நெருக்கடி காரணமாக உள்ளூராட்சிமன்றத் தேர் தல் இருமுறை பிற்போடப் பட்டுள்ளது. தேர்தல் எப்போது இடம்பெறும் என குறிப்பிடவும் முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் 330 மில்லியன் டொலர் முதல் தவணை நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனாலும் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நாட்டுமக்களின் ஜனநாயக உரிமையான உள்ளூராட்சிமன்றத் தேர்தல்நடவடிக்கைகளில் தலையிடபோவதில்லை என சர்வதேச ☞2

## சைவ மாகா சபையும்கூட கண்டனம்

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிலை கள் உடைக்கப்பட்டும் சிவ லிங்கம் உள்ளிட்ட மத அடையாளங்கள் துடைத்தழிக்கப்பட்டும் இருப்பதற்கு சைவமகா சபை தனது வன்மை யாக கண்டித்துள்ளது.

இந்த அநாசரிகச் செயலுக்குக் காரண மானவர்கள் உடனடியாகக் கண்டறியப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். சிவலிங்கமும் சிலைகளும் மீள நிறுவப்பட வேண்டும் - என்றும் சபை வலியுறுத்தியுள்ளது

கடந்த காலங்களில் சைவ ☞2

## கழிவு நீர் குழிக்குள் வீழ்ந்து இருவர் சாவு

கொட்டாஞ்சேனை - ஹெட்டியாவத்தை சுற்று வட்டத்தில் உள்ள கழிவு நீர் வெளியேற்றும் குழியில் வீழ்ந்து இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

அங்கு கழிவு நீர் வெளியேற்றும் குழியைச் சுத்திகரிக்கும்பணியில்ஈடுபட்டிருந்த கொழும்பு மாநகர சபையின் பணியாளர்கள் இருவரேஇவ்வாறுஉயிரிழந்தனர். அவர்கள் குழியில் தவறிவீழ்ந்து மூச்சுத்திணறி உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர.

கொழும்பு மாநகர சபையின்தீயணைப்புசேவைகள் திணைக்களஅதிகாரிகளினால் இருவரும் குழியிலிருந்து மீட்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும், அவர்கள் ☞2


## வெடுக்குநாறி ஆலய அழிப்பை கண்டித்துப் பெரும் போராட்டம்
### மார்ச் 30 வவுனியாவில் நடந்த முடிவு அனைவரையும் பங்கேற்க அழைப்பு

**ந.லோகதயாளன்**
**யாழ்ப்பாணம், மார்ச்28**

நெடுங்கேணி ஒலுமடு, வெடுக்குநாறி மலையில் அமைந்திருந்த ஆதி லிங்க சிவன் ஆலயம் அழிக்கப்பட்டமையைக் கண்டித்து மார்ச் 30 வவுனியாவில் பெரும் போராட்டம் ஒன்றை நடத்துவதுக்கு ஆலய நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.

வவுனியா கந்தசாமி ஆலயம் முன்பாக இருந்து காலை 9 மணிக்குத் தொடங்கவுள்ள இந்தப் போராட்டம் பேரணியாக மாவட்டச் செயலகம் வரையில் இடம்பெறவுள்ளதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சி, மத வேறுபாடின்றி அனைவரையும்



இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஆலயபரிபாலனசபையினால்பகிரங்கஅழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

”பக்தியும் அறமும. நிறைந்த சமயத் ☞2

## இந்து மா மன்றம் கண்டனம்

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்திலுள்ள விக்கிர கங்களை உடைத்துள்ளமக்கு இந்து மா மன்றம் கண்டிதுள்ளது.

இந்த தகாத செயற்பாடுகள் உடனடியாக நிறுத் தப்படவேண்டும். மீண்டும் ஆலயம் உரிய இடத்தில் பராமரிக்கப்பட வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்தாவ

சைவமக்களின்தொன்மைகளைஅழிக்கும் செயற்பாடு தொடர்கிறது. இது திட்டமிட்டு நடைபெறுகிறது. ஆட்சியாளர்கள் இத்தகைய செயல்களை நிறுத்த வேண்டும்.

ஆதி சைவ கோவில்களை சைவ மக்கள் பராமரிப் பதற்கு தொல்லியல் திணைக் களம்தொடர்ந்துஇடையூறுசெய்வதும்வேதனைக் குரியது.

விக்கிரகங்களை உடைத் ☞2

## 25 நிறுவனங்களை விற்க ரணிலின் ஆட்சி முயற்சி
### எதிர்க்கட்சி எம்.பி. அசோக்க அபேசிங்க குற்றச்சாட்டு

இன்றைய ஆட்சி 25 அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் அசோக்க அபேசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்த நிறுவனங்களில் இலபமீட்டும் நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன எனவு அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோதுஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆட்சி சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக் கப்பட்ட கடன் வசதியை பெற்றபின்னரும்நாட்டிலுள்ள இலபமீட்டும்அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்தச் செயற் பாடானது சர்வதேசநாணயநிதியத்தின் நிபந்தனைகளை மீறுவதாக உள்ளது.

சர்வதேசநாணயநிதியம் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை இலாபம் ஈட்டுவதை நோக்கி நகர்வதற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரியிருக்கின்றது. இதனை தனது நிபந்தனையிலும் உள்ளடக்கியுள்ளது.

அவ்வாறான நிலையில் தற்போது இந்த ஆட்சி ஏழு நிறுவனங்களைமுழுமையாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. வெளிநாட்டவர்களுக்கு நாட்டின்அரசநிறுவனங்களை விற்கும் இந்த நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட உள்ளது.

நாம் அறிந்தவரையில் 25 அரச நிறுவனங்களை விற்பனை செய்ய ஆட்சியாளர்கள் கடும் பிரயத்தனம் செய்து வருகின்றனர் - என்றார்.

## வெடுக்குநாறி ஆலய அழிப்பு இனவாதச் செயலின் உச்சம்
### சிறிதரன் எம்.பி. கடும் கண்டனம்



வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் இடித்தழிக்கப்பட்டு துடைத்தெறியப்பட்டிருப்பது இனவாதச் செயற்பாட்டின் உச்சம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

ஆலயம்அழிக்கப்பட்டது தொடர்பில் அவர் தனது அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெடுக்குநாறியில் நீண்ட நெடுங்காலமாகசைவத்தமிழ் பாரம்பரியத்தோடு ஆதி சிவனை வழிபட்டு வந்த மூதாதையரும் அந்த பரம்பரையும் அந்த மண்ணில் இருக்கின்றார்கள்.

வெடுக்குநாறி சிவனாலயமும், அந்த சிவனாலயத்தின் பரிபாலய தெய்வங்களானஅம்மன்,பிள்ளையார், வைரவர் போன்ற கடவுள்களுடைய சிலைகளும் அடித்து உடைத்து சிதைக்கப்பட்ட விடயத்தை நாங்கள் நேற்று பார்க்கக் கிடைத்தது.

மிகமுக்கியமாகவெடுக்குநாறிமலைஎன்பதுதொல்பொருளிற் குரியதென்றும், அங்கு யாரும் ☞2

## இந்திய எண்ணெய் கூட்டுத்தாபன தலைவர் ஜனாதிபதியுடன் பேச்சு

இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்தின்தலைவர் ஸ்ரீகாந்த் மாதவ், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்துப்பேசியுள்ளார். இந்தச் சந்திப்பில் இந்திய பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சின் செயலாளர் பன்கஜ் ஜேன் உள்ளிட்ட குழாத்தினரும் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, சூரியசக்தியில்இயங்கும்500 வீட்டு சமையல் சாதனங்கள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், பிளாஸ்டிக் போத்தல்களை மீள்சுழற்சி செய்து தயாரிக்கப்பட்ட மேலாடை (ஜெக்கட்) ஒன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் கோபால் பாக்லே உள்ளிட்ட இந்திய உயர்ஆணையத் தரப்பினரும்கலந்துகொண்டிருந்தனர்.

கொழும்பு நகரை அண்மித்துநிர்மாணிக்கப்பட்ட 3 இந்திய எரிபொருள் நிரப்பு நிலையங்களை ☞2

## அடுத்துவரும் 10 ஆண்டுகளுக்குள் மாற்றத்தை நிகழ்த்திவிடவேண்டும்
### கிரிக்கெட் வீரர் சங்கக்கார தெரிவிப்பு

அடுத்த ஆறு முதல் 10 ஆண்டுகளுக்குள் அந்த மாற்றத்தை நிகழ்த்திக் காட்ட வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் கிரிக்கெட் நட்சத்திரம் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

ஒக்ஸ்போர்ட்மையத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரகலய புரட்சியில் என்னநடந்ததுஎன்பதைநாடு சிந்திப்பதற்குரிய தருணமாக தற்போதையநிலைஉள்ளது. ஏனென்றால் அரகலய புரட்சியில் இளைஞர்களின் அரசியல் சிந்தனை வெளிப்பட்டது.

அரைகலயவில்போராடியவர்கள் நாட்டுக்கு எதிரான அரசியல்வாதிகளுக்கும் நாட்டுக்கு எதிரான கொள்கைகளுக்கும் எதிராகவே அணி திரண்டு வருகை தந்திருந்தனர்.

அந்தப் போராட்டத்திற்கு பின்னர் நாம் எவ்வாறு ஒரு முறைமை மாற்றத்தின் ஊடாக செயல்படுவது என்பது சம்பந்தமாகவே சிந்திக்க வேண்டியுள்ளது. அரசியலில் ஊழல் நிறைந்து காணப்படுவதால் அரசியலில் யாரும் ஈடுபட வேண்டாம் என்பதே பொதுவான நிலைப்பாடாக உள்ளது.

அவ்விதமாக தொடர்ந்தும் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வப்போதுஅழைப்பெடுத்து எப்போது வருகிறீர்கள் எப்போது- வருகிறீர்கள் என்று கேட்டபடி. கடைசியாக ஒரு நாள்புறப்பட்டுப்போயாயிற்று. என்னைப் புதுக்குடியிருப்பில் இருந்து அவர் தனது வாகனத்திலேயே அழைத்துச் சென்றார். அதில்

வேறும் இருவர் இருந்தார்கள். அவர்கள் வேட்டைக்காரர்கள் என்றும் அவர்களில்ஒருவர்முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்றும் அவர்களுக்குக் காடுகள் அத்துப்படி என்பதால் எங்களை பண்டாரவன்னியனின் தமக்கையின் சமாதிக்கு அழைத்துச் செல்ல வழிகாட்டுவார்கள் என்றும் தெரிவித்தார்.

காட்டுக்குள்தான் இருக்கிறது என்று அவர்கள் கூறினாலும் வீதியில் இருந்து ஒரு கொஞ்சத் தூரத்தில் இருக்கும் என்று நினைத்துக்கொண்டு சென்ற எனக்கு முதல் அனுபவமே கெடிக் கலக்கத்தைக் கொடுக்க வைத்தது.

வாகனத்தை ஓரிடத்தில் நிறுத்தும்போதே முன்னால் பின்னால்எல்லாம்தீவிரமாகக் கண்காணித்து, வேகமாக இறங்குங்கோஎன்றுஎன்னையும் விரட்டிப் பிடித்து இறக்கிக் கொண்டுகாட்டுக்குள்மறைந்து போனார்கள். வாகனத்தை அந்த இடத்திலிருந்து 5 கிலோ மீற்றர் தள்ளி நிறுத்தும்படியும் தாங்கள்திரும்பிவந்துஅழைப்பெடுத்ததும் வந்து ஏற்றும் படியும் கூறி அனுப்பிவிட்டார்கள்.

காட்டுக்குள் நடக்கத் தொடங்கினால் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறார்கள். போகிற பாதையெல்லாம் இது யானை லத்தி, இது கரடி எச்சம் என்று வேறு காட்டி இருக்கிற பயத்தையும் அதிகரிக்க வைத்துக்கொண்டிருந்தார்கள். இனியென்ன செய்வது என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அவர்களின் பின்னாலேயே ஓட்டமும் நடையுமாகச் சென்றுகொண்டிருந்தேன்.

உள்ளூர இருந்த பயத்தில் எவ்வளவுதூரம் நடந்திருப்போம்என்றுகணிக்க முடியவில்லை. கடைசியில் பண்டார வன்னியனின் சகோதரியுடையது என்று சொல லப்பட்ட இடத்தை வந்தடைந்தோம். அங்கே சிலகட்டுமானங்கள்சிதைந்து போயிருந்தன. சமாதி வடிவத்தில் எவையும் இருக்கவில்லை. கிணறு போன்ற வட்டவடிவ அமைப்புக்கள் செங்கற்களின்சிதிலங்களுடன் காணப்பட்டன. நான் அவற்றைப் படம் எடுத்துக் கொண்டேன். அங்கிருந்த ஒரு செங்கல்லில் சிறு துண்டையும் நைசாக எடுத்துப் பதுக்கிக்கொண்டேன்.

பின்னர் அங்கிருந்து வேறோர் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு காட்டின் நடுவே கற்றூண்கள் பல காணப்பட்டன. அங்கு ஒரு மண்டபம் இருந்திருப்பதற்கான அடையாளமாக அவை தெரிந்தன. மற்றொருஇடத்தைஅந்தப்புரம் என்று கூறி, அதாவது ராணி குளித்த, வாழ்ந்த இடம் என்றும் காட்டினார்கள். அந்த இடம் அந்தப்புரத்துக்குரிய அறிகுறிகளுடன் எனக்குத் தெரியவில்லை என்றாலும் மனித வாழிடமாக நீண்ட காலத்திற்கு முன்னர் இருந்திருக்கிறது என்பதற்கான ஏராளம் சான்றுகள் அங்கு கிடந்தன.

கூட வந்த வேட்டைக் காரர்கள் இருவரும் தாங்கள் இதற்கு முன்னர் பல மாதங்களுக்கு முன் வந்த போது இருந்ததைவிட இப்போது அந்த இடங்களின் நிலமைகள் பெரிதும் மாறி இருக்கின்றன என்றும் பல இடங்கள் உடைக்கப்பட்டும் தோண்டப்பட்டும் இருக்கின்றன என்றும புதையல் தோண்டுவோரது கைவரிசையாக அது இருக்கக்கூடும் என்றும் அவர்களுக்குள் பேசிக்கொண்டனர்.

எனக்கு அந்தக் கட்டுமானங்களையும் இடங்களையும்பார்த்தபோது அவை பண்டாரவன்னியன் காலத்திற்கும் வெகு காலம் முற்பட்டவை என்றே தோன்றியது. அதனால் எல்லாவற்றையும் படம் எடுத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு ஊர் திரும்பினேன்.

வந்ததும் முதல் வேலையாக பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியரைக் கண்டு இதுபற்றி எடுத்துக் கூறினேன். ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை கண்டறிந்து சொல்லியிருக்கின்றேன், அவருக்கு ஒரு பெரும் புதையலைக் காட்டியிருக்கின்றேன் என்று எனக்குள்ளேயே பெருமிதப்பட்டுக்கொண்டே இருந்தேன்.

எனது உற்சாகத்தை எல்லாம் வடித்துவிடும் விதமாக எல்லாவற்றையும் பார்த்த பேராசிரியர், நல்லது இவையெல்லாம் 2000 வருடங்களுக்கு முற்பட்ட கட்டுமானங்கள் வன்னியில்இப்படிப்பலஇருக்கின்றன என்றார்சாதாரணமாக. எனக்கு அப்படியேசப்பென்றாகிவிட்டது. நான் மெல்ல அங்கிருந்து உருவிக்கொண்டுவந்திருந்த செங்கற் துண்டையும் அவரிடம் கொடுத்தேன். அதைப் பார்த்துவிட்டு, நான் சென்னேனில்லையா இது பாலிஆற்றுமணலில்செய்யப்பட்ட, சுடப்படாத செங்கற்கள் 2 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டவை என்கூறி அவை எல்லாவற்றையும்என்னிடமே திருப்பித் தந்துவிட்டார்.

எனக்கு தாங்கமுடியாத ஆதங்கம். காட்டுக்குள் முள்ளும் பற்றையும் குத்தவும் கீறவும் 8 மைல் நடந்து ஒன்றைக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து சொன்னால் இந்த மனுசன் அதை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லையே, எங்கள் வரலாற்றுத்துறையினர் இப்படியிருந்தால் தமிழரின் வரலாறு எப்படிவெளியேவரும்என்று நினைத்துக்கொண்டே, இவற்றை ஆய்வு செய்வதற்கானவசதிகள்ஏதும்இருக்காதா என்று பேராசிரியரிடம் கேட்டேன்.

அவர் சொன்னார், "இவற்றைஆராயப்போனால் அதில்உள்ள அந்தவட்டவடிவ கட்டுமானத்தை மட்டும் வைத்துகொண்டு ஆய்வே இல்லாமல்அது புத்தவிகாரை எனன்று சொல்லுவார்கள். எல்லாவற்றையும்பௌத்தத்திற்குள்ளேயே அடக்கிவிடுவார்கள்" என்றார் விட்டேத்தியாக. இதற்குமேல் இவரிடம் பேசி என்ன பயன் என்று திட்டிக்கொண்டே வெளியே வந்தேன்.

ஆனால், இன்றைக்கு குருந்தூர் மலையிலும் வெடுக்குநாறி மலையிலும் ஏன் நிலாவரையிலும் நடப்பவற்றைப் பார்க்கும்போது. பேராசிரியரின் சொற்கள் எவ்வளவுவலிமையானவை என்று புரிகிறது. எவ்வளவு தூரம் அவர் இது விடயத்தில் அனுபவப்பட்டுநொந்துபோயிருந்தால் அது பற்றிய அவர் புறங்கையால் ஒதுக்கியிருப்பார் என்று தெரிகிறது.

நல்லவேளை அந்த இடம்வெளியேவந்து ஆயுதப் போராட்டத்தின் இதயத்தினுள் ஒரு பௌத்த விகாரை வரலாறு திரித்து எழுதப்படுவதற்குநானும்காரணமாக இருந்தேன் என்ற பழிச் சொல்லில் இருந்து பேராசிரியர் என்னையும் காப்பாற்றிவிட்டார் என்று இன்று நினைக்கின்றேன்நன்றியுடன்.

**இடிமின்னல்**

## நாணய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணய நிதியம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான 9 பில்லியன் ரூபாவை அரசாங்கம் தாராளமாக விடுவிக்கலாம்.

340 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நிறைவுப் பெற்றுள்ளது. சபைகளின் முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை அரசமைப்பின் பிரகாரம் எவ்வழிகளிலும் நீடிக்க முடியாது,அதற்கு இடமளிலில்லை.

ஏற்கனவே ஒருவருட காலம்தாமதப்படுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அவதானம் செலுத்துவதை விடுத்து மக்கள் பிரநிதிகள் இல்லாமல் உள்ளூராட்சிமனற்ங்களின் நிர்வாகத்தை முன்னெடுக்க பாராளுமன்ற உறுப்பினர் வஜித அபேவர்தன தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தகுழுவினால் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாது.

2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பணிகளுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை திறைசேரியின் செயலாளர் விடுவிக்காமல் நாடாளுமன்றத்தின் தீர்மானத்திற்கு எதிராக செயற்படுகிறார், ஆகவே திறைசேரியின் செயலாளரினால் நாடாளுமன்றம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின்சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதுஎன சபாநாயகரிடம் முறைப்பாடு செய்துள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு ஒதுக்கிய நிதியை அந்த பணிக்குப் பயன்படுத்த விடுவிக்குமாறு உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையத்தரவால் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமைமீறப்படவில்லை. ஆனால். திறைசேரியின் செயலாளரினால் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்பதை ஆளும் தரப்பினர் தெளிவாக விளங்கிக்கொள்ளவேண்டும் - என்றார்.

## சைவ மாகா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமயத்தவர்களின்வழிபாட்டிற்கு பல இடையூறுகள் ஏற்படுத்தப்பட்ட பின்னணியில் மேற்படி சம்பவம் மத நல்லிணக்கத்திற்கு பெரும் ஊறு விளைவிக்கும். இச்செயலை உரிய நோக்கில் அரசு அணுகி தீர்வு காணவேண்டும்.

ஆதிசிவன் கோவில்கள் மீதானதொடர்விரும்பத்தகாத செயற்பாடுகள் சைவ மதத்தவர்களின் மனதை ஆழமாக பாதித்து வருகின்றன.

இந்த விடயத்தில் அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயலூக் கத்துடன் கூடிய எதிர்ப்பை வெளிகாட்ட வலியுறுத்துகின்றோம் - என்றும் தெரிவித்துள்ளது.

## இந்து மா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமை தொடர்பில் ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆலய திருப்பணியை நடத்த இந்து கலாசார திணைக்களம் உரியஅனுமதியினைவழங்க வேண்டும்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். தொடர்ந்து சைவ சமயத்துக்கு வரும் இன்னல்களைபோக்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

## வெடுக்குநாறி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள், அன்பும். நற்பண்பும் நிறைந்த தமிழ் உணர்வாளர்கள்,தமிழ்தேசிய அரசயலின்பால் திரண்டு நிற்கும் அரசியல்வாதிகள், உணர்விறகும்உரிமைக்கும் குரல் கொடுக்கும் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் சட்டத்தரணிகள், பல்கலைக் கழகசமூகம்எனஅனைவரும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்" என்று ஆலயபரிபாலனசசபையினர் தெரிவித்தனர் .

இதற்கிடையே வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் இருந்த விக்கிரகங்கள் உடைத்தழிக்கப்பட்டமைக்கு எதிராக ஆலய நிர்வாகத்தினரால் வவுனியா பிராந்திய மனிதஉரிமை ஆணைக்குழுவில் திங்கட்கிழமை ஆலயநிர்வாகத்தால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டைவழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆலயத்தின் நிர்வாகத்தினர்,

எமது ஆலயத்தின் விக்கிரகங்கள் அழிக்கப்பட்டமை மூலம் பௌத்த ஆக்கிரமிப்பின் வெளிப்பாட்டை அனைவரும் உணர்ந்துகொள்ள முடியும். இந்த துன்பியல் சம்பவம் எமக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது. இவ்வாறான செயலை செய்தவர்களுக்கு எமது வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலயத்திற்குள் செல்வதற்கு தொல்லியல் திணைக்களத்தால் எமக்கு தடைவிதிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த திணைக்களத்தின் வாகனங்களே அங்கு தொடர்ச்சியாகசென்றுவந்தது. எனவே இந்தச்சம்பவத்தின் பின்னணி தொடர்பாக தொல்லியல் திணைக்களத்தின் மீதேநாம்சந்தேகம்கொள்கின்றோம். மனிதஉரிமை ஆணைக்குழுவிலும் அவர்களுக்கு எதிராகவே எமது முறைப்பாட்டை பதிவு செய்திருக்கின்றோம் என்றனர்.

இதேவேளை விக்கிரகங்கள் அழிக்கப்பட்ட விடயம் தொடர்பாக திங்கட்கிழமை காலைநெடுங்கேணிபொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

வெடுக்குநாறி சிவன் ஆலய அழிப்பு

இனவாதச்செயற்பாட்டின்

## வடமாகாண .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் ஆளுகையின் கீழ் உள்ளது.

இந்நிலையில் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக குறித்த வடக்கு மாகாண விவசாய அமைச்சின் காணியை மத்தியஅரசின்கீழ்செயற்படும் பிரதேச செயலாளரிடம் கையளிக்குமாறு ஆளுநர் கடிதம் மூலம் உத்தரவிட்டுள்ளார்..

விவசாய பண்ணை அமைப்பதற்கு ஓமந்தையில் 100ஏக்கர்காணிவழங்கப்படும் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண சபை இயங்கிய போது வவுனியா பொருளாதாரமத்தியநிலையம்அமைப்பதற்கு குறித்த காணியை கோரிய போது மாகாணசபை இக் காணியை விடுவிக்க மறுத்திருந்தநிலையில்பொருளாதார மத்திய நிலையம் மதவுவைத்தகுளத்தில்அமைக்கப்பட்டு பல வருடங்களாக பூட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கழிவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அடுத்துவரும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்துவிடமுடியாது. மக்கள் எழுச்சி ஏற்பட்டபோது, இளைஞர்கள் மத்தியில் பொதுமக்களின் நலன் சார்ந்தும்செயற்பட்டபல்வேறு எதிர்காலச்சந்ததியினரைநாம் அடையாளம்கண்டுள்ளோம்.

இயல்பாகவே போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் ஒருசமூகத்தைமையப்படுத்தி எடுத்த முயற்சியை நாம் எதிர்கால அரசியலுக்கு நிச்சயமாக பயன்படுத்த வேண்டும்.

அதன்மூலம்அரசியலில் எவ்வாறான மாற்றத்தை கொண்டுவரலாம்என்றுநாம் ஆழமாகச்சிந்திக்கவேண்டும். அது ஓர் இரவில் நடைபெறப் போவதில்லை ஆனால் அதற்காக முயற்சிக்காது இருந்து விடமுடியாது.

கிரிக்கெட் வீரர்கள் பல ஆண்டுகளாக நாட்டின் வளர்ச்சி எதிர்காலம் சம்பந்தமாக கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள். அவற்றை உள்ளீர்த்து செயல்படுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியுள்ளது தனிப்பட்டமுறையில்என்னால் எதனையும்செய்ய முடியாது.

இருப்பினும்அனைவரது ஒத்துழைப்புடனும் நான் நடவடிக்கைகளைஎடுப்பதற்கு தீர்மானித்திருக்கிறேன். என்னைவிடவும்இந்தநாட்டில் ஒரு இளம் சமூகம் அந்த இலக்குகளை எட்டக்கூடிய தகுதிகள் நிறைந்ததாக வாழ்ந்து வருகிறது.

அவ்விதமான இளைஞர் சமூகத்தின் எதிர்காலத்திற்கு வலுவான அடித்தளத்தையும் அவர்களுக்குரிய ஆதரவையும் வழங்க வேண்டியது எனது தலையாய கடமையாகும். இலங்கையை பொறுத்தவரையில் உடனடியாக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது அடுத்த ஆறு முதல் 10 ஆண்டுகளுக்குள் அந்த மாற்றத்தை நிகழ்த்திக் காட்ட வேண்டி இருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தினை நாம் விட்டு விலக முடியாது. மீண்டும் இவ்வாறானதொரு சந்தர்ப்பம் கிட்டுவதற்குப் பெரும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியிருக்கும் - என்றார்.

## இந்திய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஸ்ரீகாந்த் மாதவ் தனது இந்தப் பயணத்தின்போது திறந்து வைத்தார். மார்ச் மாதம் நிறைவடைவதற்குள் 34 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன என்றும் இந்திய பெற்றோலிய நிரப்பு நிலையத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மனோஜ் குப்தா தெரிவித்தார்.

## சிறிதரன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரவேசிக்க வேண்டாம் எனநீதிமன்றம்கட்டளையிட்டதற்கு அமைவாக அந்த ஆலயத்தை பூசித்தும், பராமரித்தும் வந்த பூபால் ஐயாவும், ஏனைய பூசகர்களும் அந்த இடத்திற்குச்செல்லமுடியாமல் வேதனைப்பட்டுக்கொண்டு நீதிமன்றகட்டளையைமதித்து நடந்தார்கள்.

அவர்கள் மீதுதான் பிக்குமாரும், தொல்பொருள் திணைக்களமும் அவ்விடத்தை சேதப்படுத்தியதாக வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். அதையெல்லாம் தாண்டிநீதிமன்றகட்டளைக்கு அமைவாக நீதிமன்ற கட்டளைக்குமதிப்பளித்துஅவர்கள் அந்த இடத்திற்கு செல்லாது இருந்தபொழுது, அந்த இடத்திற்குள் நுழைந்த பாதுகாப்பு தரப்பினர் அவ்விடத்திலிருந்த ஆதி சிவனுடைய சிவலிங்கத்தையும், அம்மன், பிள்ளையார், வைரவர், முருகன் சிலைகளையும் சிதைத்து தூக்கி எறிந்திருக்கிறார்கள். இது இந்த நாட்டில்மிகவும்கேவலமான செயல்.

கோட்டாபய செய்த கர்மம் வினையை அவரது பதவிக் காலத்திலேயே அவர் அனுபவிக்கவேண்டியநிலை அவருக்குஏற்பட்டது. இப்போது ரணிலும்அவ்வாறானபாவங்களையேஇப்போதுசெய்கிறார். அதற்கான கர்ம வினையை அவரும் அனுபவிப்பார்.

ஏற்கனவே குருந்தூர் மலையில் ஒரு விகாரையை கட்டக்கூடாது என முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கின்றது. இலங்கையில் நீதிமன்றத்தின் நியாயாதிக்கங்கள் மீறப்பட்டு அங்கு புத்த விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விகாரையிலே வைக்கப்பட்டுள்ள தூபி ஒரு சிவலிங்கமாகும். அவ்வாறு குருந்தூர் மலையில் கட்டவேண்டாம் என்ற விடயத்திற்கு மாறாக கட்டியிருக்கின்றார்கள். வெடுக்குநாறி மலையில் இருந்த சிவனாலயம் இருக்கட்டும் எனவும், இரு தரப்பினரும் அங்கு செல்லக்கூடாது எனவும்நீதிமன்றம் கட்டளையிடப்பட்டிருந்த நிலையில், இன்று அங்கிருந்த விக்கிரங்கள் உடைத் தெறியப்பட்டிருக்கிறதென்றால், மிகமோசமான காரியம். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இலங்கையினுடைய ஆட்சியாளர்கள் எங்கெங்கு புத்தரை வைக்க முடியுமோ வைத்து, அந்த இடங்களை ஆக்கிரமிக்கமிகக்கடுமையாக ஈடுபடுகின்றார்கள் என்பதை இந்தச் சம்பவம் மிகத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

அண்மையிலே, கச்சதீவிலும் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது. நெடுந்தீவுபங்குத்தந்தையாக இருக்கின்ற தந்தை வசந்தன் அவர்கள் நேரடியாக கச்சதீவில் புத்தர் சிலை எழுப்பப்பட்டிருப்பதை நேரடி யாக கண்டிருக்கிறார்.

இம்முறை 40 பிக்குமார்கள் கச்சதீவு திருவிழாவின்போது- அங்கு சென்றிருக்கின்றார்கள். கச்சதீவு என்பது வடக்கு மகாணத்தில் யாழ்ப்பாணத்தோடு சேர்ந்த ஒரு தொகுதி. அங்கு இந்தியாவின்தமிழ்நாட்டைசேர்ந்த மக்களும் வருவார்கள். இலங்கையில் இருக்கின்ற மக்களும் செல்வார்கள்.

அப்படியான இடங்களிலும் புத்தர் குடியேறி இடம் பிடிக்கின்ற செயற்பாட்டில் ஈடுபடுகின்றார். குருந்தூர் மலையில் புத்தர் சிலை இருப்பதாக குறிப்பிட்டு இன்று 400 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை பறிப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இன்று காட்டுக்குள் இருக்கின்ற, கால காலமாக பொங்கல் செய்து வழிபட்டுக் கொண்டிருக்கின்றஆதிசிவன் ஆலயத்தை வெடுக்குநாறி மலையிலிருந்து தக்கி எறிந்துவிட்டு, அந்த இடத்தில் புத்தர் சிலையை வைத்து அந்தபிரதேசங்களைதங்களுடையபிரதேசங்களாக மாற்ற முயற்சிக்கின்றார்கள்.

இந்த நாட்டில் ஜனாதிபதியும் பௌத்த சாசனஅமைச்சர்ஆகியோரும் இனவாதத்தின் உச்சத்தில் இருக்கிறார்கள்என்பதைத்தான் இந்த செயற்பாடுகள் வெளிக்காட்டுகின்றன.

நாங்கள் தொடர்ந்தும் இந்த விடயத்திற்காக குரல் கொடுப்போம்.

தொடர்ந்தும் ஆதிசிவன் ஆலயம் வெடுக்குநாறி மலையில் இருப்பதற்கான முழுவகையான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கின்றோம்.

இவ்விடயம் தொடர்பில் வரும் வியாளனன்று மிகப்பெரியபோராட்டம்ஒன்று முன்னெடுக்கப்பட்டும், இவ்விடயம் தொடர்பில் அவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளையும்செய்து போராட்டங்களையும் முன்னெடுத்து இந்த உருவச்சிலைகளை இருந்த இடங்களில் மீள வைக்கும்வரை தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஒற்றுமையாக இந்த பணியை செய்ய வேண்டும்.

இதிலே, அரசியல், கருத்து வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு நாங்கள் சைவத் தமிழர்கள், இந்துத் தமிழர்கள் எல்லோரும் இணைந்து பிடுங்கப்பட்ட சிலைகளை அங்கு கொண்டு சென்று அதனை பிரதிஸ்டை செய்து தொடர்ந்தும் அந்த இடத்தில் வழிபாடுகள் இடம்பெறும் வகையில் எங்களுடைய செயற்பாடுகள் அமைய வேண்டும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22






# எமது கடல் வளத்தை எந்தவொரு நாட்டுக்குமே வழங்குவதில் டக்ளஸுக்கு விருப்பமில்லை

## இப்படிச் சொல்கிறார் ஈபிடிபி பேச்சாளர்




எமது கடல் வளங்களையோ கடற்பரப்புக்களையோ இந்தியாவுக்கு மட்டுமல்ல எந்தவொரு நாட்டுக்கும் வழங்குவதை அமைச்சர் டக்ளஸ் தேவாந்தா ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் ஷ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் கடல் வளங்களையோகடற்பரப்புக் களையோ எந்தவொரு நாட்டுக்கும் தாரைவார்ப் பதற்கோ அமைச்சர் விரும் பவில்லை. அதில்சட்டத்துக்குப் புறம்பாகமுன்னெடுக்கப்படும் இழுவைமடி தொழிலுக்கோ கடலட்டைப் பண்ணைகளுக்கோ இந்தியாவுக்கு மட்டுமல்ல எந்தவொரு நாட்டுக்கும் அனுமதி வழங்குவதைஎமதுகட்சியின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா முற்றாக விரும்பவில்லை.

அண்மைக் காலமாக யாழ் மாவட்த்திலும் வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் கடற்றொழில் அமைச்சருக்கு எதிராக பல்வேறுபட்ட கருத்துக் களும் போராட்டங்களும் ஒருசிலரால் அரசியல் நோக்கங்களுக்காக

முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அண்மையில் மன்னார் மாவட்டத்திலும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில்கடலட்டை பண்ணைகள் அனுமதியின்றி மேற்கொள்ளப்படுவதாகவும் இதனால் கடற்றொழிலுக்கு பாதிப்பு உருவாகுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடலட்டைபண்ணைகள் ஒவ்வொன்றும் நாரா மற்றும் நெக்டா நிறுவனங்களின் ஆய்வறிக்கையின் அடிப் படையில்குறித்தொதுக்கப்பட்ட இடங்களிலேயேமுன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

கடலட்டைத் தொழில் முயற்சியை முன்னெடுப் பவர்கள்பொருளாதாரரீதியில் வழர்ந்துவிடக்கூடாதென்றும் வடக்கின் அப்விருத்தியில் கடற்றொழில் அமைச்சரின் வகிபாகம் இருந்துவிடக் கூடாதென்றும் எண்ணும் சுயலாபவாதிகள்

சிலர் வெளிநாட்டு அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கருத்தக்களை முன்வைத்து வருகின்றனர். இது வடக்கின் கடற்றொழிலாளர்களுக்கு நன்கு தெரியும். இதேநேரம் தற்போது அதிகளவான கடலட் டைப் பண்ணைகளை அமைப்பதற்கான அனு மதியைகடற்றொழிலாளர்கள் கோரிவருகின்றனர். இதிலிருந்து போராட்டங்களை முன்னெடுக்கும் தரப்பினர் எதற்காக அதை மேற்கொள் கின்றனர் என்ற உண்மை புலனாகின்றது.

குறுகிய தரப்பினரது சுயலாப தேவைக்கான எதிர்ப்புகளுக்கோ ஆர்ப்பாட்டங்களுக்கோ அடிபணித்து கடலட்டைப் பண்ணைகளுக்கான முறையான அனுமதியை அமைச்சர் நிறுத்திவிடப் போவதில்லை - என்றார்.

# பால் தேநீர் விலை 10 ரூபாய் குறைப்பு

திங்கட்கிழமைமுதல்பால் தேநீரின்விலை 90 ரூபாவாக குறைக்கப்படுவதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் பால் தேநீர் தலைநகர் கொழும்பில் 100 தொடக்கத் 130 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டது.

ஏப்ரல் மாத தொடக்கத் திலிருந்து ஒரு கிலோகிராம் பால் மாவின் விலையை 200 ரூபாவாலும் 400 கிராம் பால் மாவின் விலையை 80 ரூபாவாலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்திருந்த நிலையில் அதற்கு இணையாக பால் தேநீரின் விலையை குறைப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# உள்ளூராட்சிதத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும்

## பிள்ளையானின் கட்சி செயலாளர் தெரிவிப்பு



காலம்தாழ்த்தாது உரிய வேளையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதுவே எமது கட்சியின் நிலைப்பாடு இந் நிலைப்பாட்டில் நாங்கள் மிக உறுதியாக இருக்கின்றோம். எனதமிழ்மக்கள்விடுதலைப் புலிகளின்பொதுச்செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் குறிப்பிட்டார் .

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: உள்ளூராட்சி மன்ற தேர்தல் மூலம் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமாஎன்பதற்கு அப்பால் ஜனநாயகத்தை இந்த நாட்டில் கேலி கூத்தாக மாற்றிவிடக்கூடாது. தொடர்ந்தும் தேர்தலை பிற்போடப்படுவதென்பது ஏற்றுக்கொள்ளகூடிய விடயம் அல்ல தேர்தல் நடத் தப்படவேண்டும்என்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரும் அவரோடு இணைந்த தேர்தல் ஆணைக்குழுவும் மிகச் சிரமப்பட்டுக்கொண்டிருப்பது மிகவும் மனவேதனைக் குரியது கடந்த காலங்களில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை தவிர்க்கமுடியாத காரணங்களால் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது ஆனால் இம்முறை

உள்ளுராட்சி மன்ற தேர்தல் பிற்போடப்பட்டுச் செல்வதென்பது நிச்சயமாக ஜனநாயகத்திற்குரிய சாவு மணி நாட்டில் பொருளாதர ரீதியான நெருக்கடி இருக்கின்றது என்பது உண்மைதான் அதனை தீர்த்துக் கொள்கின்றஅதேவேளையில் ஜனநாயகத்திற்கான நெருக்கடிஏற்பட்டுவிடக் கூடாது என்பதில்நாங்கள் மிகஉறுதியாகஇருக்கின்றோம்.

மாகாணசபை தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாக கிழக்கு மாகாணத்தில் அதிகாரிகளால் நிர்வா கத்தை ஒழுங்காக கொண்டு செல்லமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது - என்றார்.

# சைவப் புலவர் சங்கப் பரீட்சை ஏப்ரலில்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் 2023 ஆம் ஆண்டுக்கான இளஞ் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் சித்திரை மாதம் 28,29,30 வைகாசி மாதம்1 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்தார்.

மேற்படி பரீட்சைகள் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாத்திரம், 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இலக்கணம், 30 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு உரைநடை, 1 மணிக்கு வரலாறு, வைகாசி 1ஆம் திகதி திங்கட்கிழமை 9 மணிக்கு இலக்கியம் ஆகிய பாடங்களில் பரீட்சை இடம்பெறவுள்ளது

பரீட்சைகள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயம் மட்டக்களப்பு ஆணைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் சித்திரை 2 ஆம் வாரம் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்

# மட்டக்களப்பில் மே தின விழா

த. தர்மேந்திரா

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, நாம் மனிதர்கள் கட்சி ஆகியன இணைந்து மேதின நிகழ்வைமட்டக்களப்பில் நடத்துவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்கின்றன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இதில் பங்கேற்பார் என்று நாம் மனிதர்கள் கட்சியின் பொது செயலாளர் ஹாரீஸ் அலி உதுமாலெப்பைதெரிவித்தார்.

அரசியல், சமூக, பொதுநல வேலைதிட்டங்களில் ஒருமித்தும், ஒத்துழைத்தும் எதிர்காலத்தில்செயற்படவேண்டும்என்று இருகட்சிகளுக்கும்இடையில் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டு உள்ளது. இதன் அடிப்படையில் முதலாவது வேலை திட்டமாக மே தின நிகழ்வை ஒருமித்து நடத்த தீர்மானித்தனர் என்றும் ஹாரிஸ்அலிஉதுமாலெப்பை தெரிவித்தார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## தமிழர் மௌனம் கலையட்டும்

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான பயங்கவாத எதிர்ப்புச் சட்ட வரைவு வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது. வழக்கமாக இத்தகைய சட்டங்கள் வரும்போது அது குறித்து அதிக அக்கறையும், விமர்சனங்களும் தெரிவிப்பவர்களாகத் தமிழர்கள், குறிப்பாகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே இருப்பார்கள். ஆனால் இந்தத் தடவை அப்படிக் கண்டனங்களோ எதிர்வினைகளோ அவர்களிடம் இருந்து உடனடியாக வரவில்லை.

ஆனால் வழக்கத்திற்கு மாறாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிரான குரல் சிங்களவர்கள் மத்தியிலிருந்து எழுந்துள்ளது. புதிய சட்டம் முன்னர் இருந்த சட்டதைவிட வலுவானது, தீவிரமானது என்று கண்டிக்கப்பட்டிருக்கின்றது.

அரசின் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது ஏற்கனவே இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட வலுவானது மிகப் பெரும் ஆபத்துக்களை கொண்டிருக்கிறது என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் செயலாளரான புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

”ஆட்சியாளர்களால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது மிகவும் மோசமான முறையில் ஜனநாயகத்தை மறுக்கின்ற தன்மையைக் கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட குடிமக்களை அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்கு இந்தச் சட்டம் பல்வேறு ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சட்டம் அமுலாக்கப்பட்டால் ஆட்சியாளருக்கு எதிரான எந்தவொரு நபரையும் கைது செய்யமுடியும். ஆட்சியாளர்களுக்கு எதிராக எழுதுபவர்களை, விமர்சிப்பவர்களை சுவரொட்டிகள் ஒட்டுபவர்களை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்யவதற்கு இந்தச் சட்டம் இடமளிக்கின்றது.

அவ்வாறு கைது செய்யப்படும் ஒருவரை ஆடைகளைக் களைந்து விசாரணைக்கு உட்படுத்தும் அதிகாரத்தை சதாரண உதவி பொலிஸ் ஆய்வாளருக்கே (சப் இன்ஸ்பெக்டர்) ஒருவருக்கே வழங்குகின்றது. அத்துடன் பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறித்த நபரை மூன்று மாதங்கள் வரையில் தமது காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்த முடியும்.

பின்னர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்படுகின்றபோது விசாரணை முடிவடியவில்லை பிணை வழங்க முடியாது என்று சட்டமா அதிபர் ஊடாக மறுதலிக்கவும் முடியும். இந்த அதிகாரங்கள் அனைத்துமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடத்திலேயே குவிக்கப்படவுள்ளது.

ஆகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது, தற்போதுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தினை விடவும் வலுவானது. அதன் மூலம் நிறைவேற்று அதிகாரமுறைய ஜனாதிபதி தான் விரும்பாத அமைப்புக்களைத் தடை செய்யமுடியும். அதுமட்டுமல்லாது அந்த அமைப்பில் உள்ள உறுப்பினர்களைப் பயங்கரவாதிகள் என்று பெயரிடமுடியும்.

இறுதியில் இந்த விடயம் சம்பந்தமாக யாரிடம் மேன்முறையீடு செய்வது யாரிடம் சென்று கேட்பது என்பதற்காக ஜனாதிபதியாலேயே மூன்றுபேர் நியமிக்கப்படுவர். ஆகவே ஒட்டு மொத்தமாக பார்க்கின்றபோது இங்கு நிறைவேற்று அதிகாரமே பயன்படுத்தப்படுகின்றது. தற்போது நீதிமன்றத்திடம் உள்ள அதிகாரங்கள்கூட நிறைவேற்று அதிகாரத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளன” என்று இந்தச் சட்டம் தொடர்பில் புபுது விளக்கமளித்துள்ளார்.

இவ்வளவு பாரதூரமான சட்டம் தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல்வாதிகளும் அமைதி காப்பதன் உள்நோக்கம் புரியவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் 30 வருடங்களாக அதிக பாதிப்பை எதிர்கொண்டவர்கள் தமிழ் மக்கள். சொல்லொணாத் துயரத்தைச் சுமந்தவர்கள். அப்படியிருக்கும்போது அதைவிட மோசமானது என்று தெரிவிக்கப்படும் புதிய சட்டம் குறித்த தமிழ்ப் பிரதிநிதிகளின் அமைதி கலையவேண்டும். புபுது சொல்வது உண்மையானால் இந்தச் சட்டத்தாலும் இன்னும் அதிகமாகத் தமிழர்களே பாதிக்கப்படப்போகிறார்கள். ஆட்சியாளர்களைச் சகட்டு மேனிக்கு விமர்சிப்பவர்கள் தமிழர்களே புதிய சட்டம் வந்தால் அதுவும்கூடத் தடைப்பட்டுப்போகும் வாய்ப்பிருக்கிறது என்றால் அதை எதிர்க்க வேண்டாமா?

# ஈபிடிபி மறுப்பு




யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் நிலைப்பாட்டையும் மக்களையும் சமூகத்தையும் அறிந்திராதவர்களே ஈபி டிபி மீது அபகீர்த்தி ஏற்ப டுத்தும் வகையில் கருத்தக் களைச் சொல்லி தம்மை அடையாளப் படுத்திக் கொள்ள முயற்சிக் கின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளரும் ஊடக பேச்சாளருமான ஐயாத்துரை ஷ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற போர்வையில் ஒரு சிறு கூட்டத்தினர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர்.

இதன்போது அங்கு சென்ற சிலர் அவர்களை வெளியேறுமாறு கோசமிட்டு குழப்பத்தை ஏற்படுத்தினர் எனவும் அந்தச் சிலரை ஈபிடிபி கட்சியினர் என்றும் ரஜீவ்காந்த் என்ற நபர் கருத்து தெரிவித்திருந்தார். அக்குழப்பத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட தரப்பினர் மது போதையில் இருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

அச்சம்பவத்திற்கும் அங்கு கூறப்பட்ட கருத்துக்கும் அங்கு சென்றவர்களுக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

அதேவேளை யாழ் பல்கலைக்கழக சமூகமும் குறித்த அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினரது சந்திப்பை புறக்கணித்திருந்தனர்.

இதனூடாக யாழ் கல்விச் சமூகம் மற்றும் மக்களின் மநநிலையையோ இங்குள்ள தேவைப்பாடுகளையோ குறித்த ஏற்பாட்டாளர்கள் அறிந்திரக்கவில்லை என்பது புலனாகின்றது.

அந்த வகையில் குறித்த குற்றச்சாட்டை முன்வைத்த ரஜீவ்காந்த் என்ற நபர் தனது தனிப்பட்ட சுயலாபங்களுக்காக எம்மீது சேறுபூசி தன்னை வழிநடத்தும் தரப்பினரை திருப்திப்படுத்த முயற்சித்துள்ளமை தெளிவாக தெரிகின்றது - என்றார்.

# வேலோடுமலை செல்ல படகுப் பாதை தயார்

## ஏறாவூர் பிரதேச சபையின் ஆன்மீகப் பணி.

(வி.ரி. சகாதேவராஜா)

ஈழத்து பழநி என அழைக்கப்படும் கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற சித்தாண்டி







வேலோடுமலை முருகன் ஆலயத்திற்குச் செல்ல 10 லட்ச ருபா பெறுமதியான படகுப் பாதை வழங்கிவைக்கப்பட்டது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சர்வாவின் வழிகாட்டலில் முன்னாள் உறுப்பினர்களான கே.துரைரெத்தினம், எஸ். திருநாவுக்கரசு ஆகியோரின் வேண்டுகோளுக்கமைய மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ் இதனை ஆலயத்திற்கு வழங்கி வைத்தார்.

வேலோடுமலை முருகன் ஆலயத்திற்குச் செல்வதானால் சித்தாண்டி சந்தனமடு ஆற்றினைக் கடக்கவேண்டும். இதுவரை காலமும் பாதுகாப்பற்ற முறையில் வள்ளல்களில் மக்கள் பயத்துடன் பயணித்து வந்தனர்.

அக் குறையை ஏறாவூர் பிரதேச சபை தீர்த்து வைத்துள்ளது. அப் படகுப் பாதை கையளிக்கும் வைபவம் வெள்ளிக்கிழமை சந்தனமடு ஆற்றில் இடம்பெற்றது.

வைபவத்தில் சித்தாண்டி வேலோடுமலை முருகன் ஆலய தலைவர். சு.தியாகராசாவிடம் இப் படகுப் பாதை ஒப்படைக்கப்பட்டது.

மார்ச் 30 ஆம் திகதி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் தொடங்கவுள்ளது.

# அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தி.யில் முப்பெரும் விழா சிறப்புற்றது

(காரைதீவு சகா)

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்யாலயத்தின்





முப்பெரும் விழா வித்தியாலய அதிபர் பொன். பாரதிதாசன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இம்முப்பெரு விழாவிற்கு பிரதம அதிதியாக நாவிதன் வெளி கோட்டக்கல்விப்பணிப்பாளர் பி. பரமதயாளன் ,கௌரவ அதிதியாக உதவிக் கல்விப்பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, மற்றும் சிறப்பதிதிகளாக ஆரம்பக் கல்விஆசிரியஆலோசகர்எஸ். அற்புதராஜா, விழா அனுசரணையாளர் தெய்வநாயகம் சிவகுமார், பிரபல சமூக செயற்பாட்டாளர் சந்திரசேகரம் ராஜன், ஆலய தர்மகர்த்தாக்களான சுதா. சுரேந்திரன், ரி.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள் .

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ரி. பிரவிஷன்(150) எஸ்.மகிஷா (148)ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

மேலும் முன்பள்ளியிலிருந்து வருகைதந்த தரம் ஒன்று மாணவர்களை வரவேற்ற அதேவேளை தரம் ஐந்தில் நூறு வீதசித்தி பெற்ற 10 மாணவர்களினதும் விடுகை விழாவும் ஒருங்கே இடம் பெற்றது.

தரம் 5 புலமைப் பரிசில் ஆசிரியை திருமதி உதயலட்சுமி பொன்னாடை போர்த்தப்பட்டுப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

விடுகை பெற்றுச் செல்லும் மாணவர்கள் மற்றும் வருகைதந்த தரம் 1 மாணவர்களுக்கு விழா அனுசரணையாளர் கொடை வள்ளல் தெய்வநாயகம் சிவகுமார் பாடசாலை பைகள் உட்பட கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார். சித்திபெற்ற புலமையாளர்களான மகிஷா பிரவிசன் உள்ளிட்ட புலமையாளர்களின் கண்கவர் நடனமும் இடம்பெற்றது.



# தரமற்ற உணவுப் பொருள் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் அதிக விலைக்கு மற்றும் தரமற்ற உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இவ்வாறான வர்த்தகர்களை அடையாளம் காண நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான சோதனைகளை மேற்கொள்ள நுகர்வோர் அதிகார சபை விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது என அதிகார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கிய உணவு மொத்த விற்பனை நிலையங்கள், களஞ்சியசாலைகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களை சோதனை செய்ய அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் புத்தாண்டு பண்டிகையின்போது வர்த்தகர்கள் தரமற்ற உணவுப் பொருள்களை அதிக விலையில் விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால் இந்த சோதனைகள் நடத்தப்படுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பண்டிகை காலங்களில் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி இணையம் மூலம் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு நுகர்வோர் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். இது போன்ற நேரங்களில் மக்கள் எதிர்நோக்கும் முறைகேடுகளைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

உணவுப் பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்தல், தரமற்ற உணவுப் பொருள்களை விற்பனை செய்தல், விலை பொறிக்கப்படாமல் உணவுப் பொருள்களை விற்பனை செய் தல் உள்ளிட்ட நுகர்வோர் விவகார அதிகார சபையின் உத்தரவை மீறி செயற்படும் அனைத்து வியாபாரிகளும் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது வர்த்தகர்களால் ஏதேனும் முறைகேடுகள் நடந்தால் 1977 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து நுகர்வோர் விவகார அதிகார சபைக்குத் தெரிவிக்குமாறு சபை அனைத்து நுகர்வோரையும் கேட்டுக்கொள்கிறது. - என்றார்.

# ஓரினச்சேர்க்கையைக் குற்றமற்றதாக்கும் விதத்தில் சட்டத்தில் மாற்றங்கள் வரும் என்கிறார் ஜனாதிபதி



ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்குத் விதத்தில் தண்டனைச்சட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹவார்ட் பல்கலைகழகம் ஏற்பாடு செய்த மெய்நிகர் கலந்துரையாடலின் போது கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

எல்ஜிபிடி சமூகத்தினர் உரிமை தொடர்பான முதலாவது கேள்விக்கு பதிலளிப்பது என்றால் எங்களின் தற்போதைய சட்டத்தின் படி ஓரினச்சேர்க்கை என்பது இலங்கையின் தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றமாகும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆனால் நான் அறிந்த வகையில் கடந்த ஐந்து வருடங்களாக இது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தற்போது அரசியல்வாதிகள் குழுவொன்று இதுதொடர்பாக ஆராய்கின்றது அவர்கள் தண்டனைச்சட்டத்தின் கீழ் இதனை குற்றமற்றதாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்கள் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன என்பது எனக்கு தெரியும் ஏதோ ஒரு கட்டத்தில் அவர்கள் சட்டமொன்றை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவருவார்கள் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.




# கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத்தின் 30 ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பும்



கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழா வும், பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

மங்கள விளக்கேற்றலுடம் ஆரம்பமான இந்த நிகழ்வில், தமிழ்த்தாய்க்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து தமிழை வளர்க்க அருந்தொண்டாற்றிய திருவள்ளுவர், ஔவையார் உள்ளிட்டோருக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் 30 ஆம் ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், கரைச்சி பிரதேசசபையின் செயலாளர் எஸ்.பார்த்தீபன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், மேனாள் பள்ளி முதல்வர் எஸ். பாலகிருஸ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு



எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒருவருடத்தில் ஆயிரத்து 400 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தொற்று நோயியல் பிரிவின் சமூக மருத்துவ நிபு ணர் துஷானி தாபரே தெரிவித்துள்ளார்.

வயல், சதுப்பு நிலங்கள், வண்டல் நிலங்கள் மற்றும் சுரங்கங்களில் பணிபுரிபவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# பேரினவாத நடவடிக்கைகளை நிறுத்த மனோ வலியுறுத்தல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேரினவாத நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் வலியுறுத்தியுள்ளார்.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சிலைகள் உடைக்கப்பட்டு, வீசப்பட்டுள்ள நிலையில் அதற்கு கண்டனம் தெரிவித்து ருவிட்டரில் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

தொல்பொருள் திணைக்களம், தொல்பொருளை பாதுகாப்பது எனக் கூறிக்கொண்டு இந்துக்கள் இந்தக் கோவிலுக்கு போவதை தடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இராணுவ பாதுகாப்பு வலயத்தில் இடம்பெறும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.



# தேசபந்து தென்னகோனுக்கு எதிரான ரிட் மனு தள்ளுபடி

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிரான ரிட் மனுவை நிராகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (திங்கட்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

கோட்டாகோகம போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் சந்தேகநபரான தேசபந்து தென்னகோனை கைது செய்து வாக்குமூலம் பதிவு செய்யுமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தேசபந்து தென்னகோன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தார்.

இதனை பரிசீலித்த நீதியரசர்கள், தேசபந்து தென்னகோனை கைது செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை தொடர்ந்தும் விசாரணை செய்ய முடியாது என அறிவித்தனர்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## UNIVERSITY OF JAFFNA – SRI LANKA

### INVITATION TO BIDS
### SUPPLY& INSTALLATION OF DIESEL GENERATOR
### UNIVERSITY OF JAFFNA

### UJ/F/NCB/01/2023

Chairman, Department Procurement Committee, University of Jaffna, Thirunelvely invites sealed bids from eligible bidders for **Supply & Installation of Diesel Generator at Faculty of Management Studies & Commerce, University of Jaffna** as described below.

1. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure.
2. Bidder should have at least three years' experience in the relevant field in Sri Lanka. 3. Interested eligible bidders may obtain further information from the Assistant Bursar / Supplies **(Contact No: 021-2220962)** of the University of Jaffna, and inspect the bidding documents at the Supplies I, Finance Branch, University of Jaffna from **9.00 am to 3.00 pm from the date of 28/03/2023 to 17/04/2023 at free of charge.**
4. A complete set of bidding documents in English may be purchased by interested bidders on submission of a written application to the Assistant Bursar / Supplies I, or could be downloaded from the University website **www.jfn.ac.lk** upon payment of a non-refundable fee of Rupees **3,500/=** either in cash at the Shroff Counter of the University of Jaffna or to the credit of Peoples' Bank University of Jaffna Branch, account no**: 970000060000276.** The cash receipt of the Shroff or the bank deposit slip to be attached with the bidding documents. The documents may be purchased until **2.30 pm from 28/03/2023 to 17/04/2023.**
5. Bids must be delivered in duplicate to be addressed **"The Bursar, University of Jaffna, Thirunelvely,"** on or before **2.00 pm on 18/04/2023.** Please indicate the **"Supply & Installation of Diesel Generator - UJ/F/NCB/01/2023 –18/04/2023"** on the left-hand corner of the envelope.
6. All bids must be accompanied by a Bid Security addressed to the, **"Vice Chancellor, Department Procurement Committee, University of Jaffna,** valid for **120 days (15/08/2023)** from the date of the bid opening as specified in the following Table.

**SUPPLY & INSTALLATION OF DIESEL GENERATOR AT FACULTY OF MANAGEMENT STUDIES & UNIVERSITY OF JAFFNA**

| Serial No | Description Items | Quantity | Bid Security (Rs) |
|---|---|---|---|
| 01 | Diesel Generator | 01 | 85,000.00 |

7. Pre-Bid meeting will be held on **10/04/2023 at 10.00 am**.in the **Board Room of University of Jaffna**
8. The bids shall be deposited in the **'Tender Box'** available in the **Finance Branch** of the University, or sent under Registered Cover to be received on or before the deadline to the address given Clause No.5.
9. Late bids will be rejected.
10. The bids will be opened at **2.00 pm** on **18.04.2023,** in presence of the bidders or their authorized representatives who choose to attend the bid opening at the **Board room of the University.**

The Chairman,
Department Procurement Committee,
University of Jaffna,
Thirunelvely.
**TP. / Fax No: 021-2229603, 021-2220962**


# நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்த மயமாக்கல் அரசின் திட்டம் அல்ல

## பிரதமர் தினேஷ் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு



கொழும்பு, மார்ச் 28

தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மயமாக்கலை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் திட்டம் இல்லை என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் படைத்தரப்பினராலும் தொல்பொருள் திணைக்களத்தினராலும் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல் தொடர்பிலான கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அரசாங்கத்தின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழரின்மத, பண்பாட்டு, கலாசார அடையாளங்களை அழிக்கும் நோக்கம்அரசாங்கத்துக்குஇல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழரின் மத, பண்பாட்டு, கலாசார அடையாளங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வைத்துள்ள கருத்துக்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சு அதிக கவனம் செலுத்தும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# சுவிஸ் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் பாடல்கள் ஒன்றிணைந்த இசைநிகழ்வு யாழ். பல்கலையில்







இலங்கை மற்றும் மாலை தீவு களிற்கான சுவிட்சர்லாந்து தூதரகம் மற்றும் சர்வதே அமைப்பான **la Francophonie** இன் அனுசரணையுடன் , சுவிஸ் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் பாடல்கள் ஒன்றிணைந்த இசை நிகழ்வு.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்றது. இந் நிகழ்வானது **Francophonie 2023** இனை கொண்டாடும் வகையில் புகழ்பெற்ற **Les Monsieur Monsieur** குழுவின் **Larent BRUNETTI** மற்றும் **Mario PACCHOLI** இருவரும் இணைந்து நடாத்தினார்கள் .

இந்நிகழ்வில் இலங்கைக்கான சுவிட்சர்லாந்து நாட்டின் பதில் தூதுவர் **Raoul imbach,** யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சி.ஸ்ரீசற்குணராசா, தூதரகஅதிகாரிகள். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இவ் இசைப்பயணத்தில் மேற்குறிப்பிட்ட பாடகர்களின் சொந்த இசையமைப்பில் உருவான பாடல்கள் மற்றும் பிரான்ஸ், சுவிஸ் நாட்டு இசையமைப்பாளர்களின் சிறந்த இசையமைப்பில் வெளிவந்த பாடல்கள் இசைக்கப்படவுள்ளது.

இப்பாடல்கள் பாடகர்களின் உணர்வுபூர்வமான ஆற்றுகை மற்றும் தனித்துவமான இயல் இசைவிளக்கங்களுடன், மொழித் தடைகளை கடந்து பார்வையாளர்களை மெய்மறந்து ரசிக்க வைத்திருந்தது.

**Laurent BRUNETTI** அவரின் இளம் வயது முதல் இயல் இசை துறையை தமது தொழில் வாழ்க்கையாக உருவாக்கினர். பியானோ அல்லது இணைந்த இசைக்குழுவுடன் சேர்ந்து **BRUNETTI,** பாடல் வரிகளுக்கு இசை யமைத்தார் அத்துடன் இய லிசை ஆற்றுகைக்கான மெல்லிசை மெட்டுகளையும் வழங்குகின்றார். இதுவரை ஐந்து இசை தொகுப்புகளை வெளியிட்டுள்ள இவர் ஏனைய இசைக் கலைஞர்களுக்கு பாடல் வரிகளை எழுதியுள்ளார்.

**Mario PACCHIOLI** தமது இசை வாழ்க்கைப் பயணத்தை ஒரு பியானோ வாசிப்பவராகவும் ஓபெரா பாடகராகவும் 7 வயதில் ஆரம்பித்திருந்தார்.

சுவிட்சர்லாந்தில் சாதனை படைத்துள்ளதுடன் நான்கு இசை தொகுப்புகளை வெளியிட்டுள்ள இவர் **Los Angeles** நகரின் **Musicians Institute of Techmology of Hollywood** தமது கலைத்திறமையை மேம்படுத்தியிருந்தார். பிரான்ஸில் திரை நடிகராகவும் பயிற்சி பெற்றுள்ளார்.

இவரின் அண்மைய இசை தயாரிப்பான **Remas** ஐ தமது தாய் மொழி **Romansh** ற்கு சமர்ப்பணம் செய்திருந்தார். இணைந்த இசைக் குழு, தனித்துவமான குரல் மற்றும் பாடகர் குழு ஆகியவற்றுக்காக **PACCHIOLI** புகழ்பெற்றுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தந்தை செல்வாவின் 125ஆவது பிறந்த தின நிகழ்வு மார்ச் 31



செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த தின நிகழ்வு மார்ச் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மலையக மக்களின் மனித உரிமைகள் எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவை சமூக அபிவிருத்திக்கான நிறுவன நிர்வாக இயக்குநர் பெரியசாமி முத்துலிங்கம் மேற்கொள்ளவுள்ளார். தந்தை செல்வா நினைவுப் பேருரையை 13 ஆம் திருத்தச் சட்டம் மீதான ஒரு பிரதிபலிப்பு எனும் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் ஆற்றவுள்ளார்.

பேராசிரியர்.சி.பத்மநாதன் எழுதிய 'தந்தை செல்வாவின் அரசியல் ஞானமும் சாதனைகளும்' என்ற நூலும் கவிஞர் எ.எம்.எம்.அனஸ் ' தந்தை செல்வா சீர்மை காவியம்' எனும் கவிதை நூலும் இதன்போது வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. நிகழ்வின் ஆரம்பத்தில் தந்தை செல்வா சமாதியில் மலர்அஞ்சலிசெலுத்திநிகழ்வு ஆரம்பிக்கவுள்ளது.

# நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் போராட்டமே காரணம் என்கிறார் நாமல்



கொழும்பு, மார்ச் 28

நாட்டில் நிலவும் அனைத்து பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கும் போராட்டமே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பேருவளையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

போராட்டப் பகுதியில் வழங்கப்பட்ட போதைப் பொருள் பாவனையால் சிறுவர்கள் தற்போது அதற்கு பழகிவிட்டனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# சீனாவின் செயற்பாடு அமெரிக்கா அதிருப்தி



சீனாவின் செயற்பாடுகள் பல சந்தரப்பங்களில் கவலையடையச் செய்கின்றன. குறிப்பாக தென் சீனக் கட லில் அதன் ஆக்கிரமிப்பு நடத்தைகளால் அமெரிக்கா குறிப்பிடத்தக்க கவலைகளைக் கொண்டுள்ளதாக வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு சபையின் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி தெரிவித்துள்ளார்.

சீனா தவறான கடல் உரிமைகோரல்களைப் தொடர்வதால் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதனை அறிவுசார் திருட்டு என்பதுடன் சில வர்த்தக நடைமுறைகள் பற்றிய கவலைகளையும் ஏற்படுத்தியுள்ளன.

சீனாவுடன் அமெரிக்க ஒத்துழைப்பிற்கு இடமுள்ளதாக நாங்கள் நம்புகிறோம். அதை நாங்கள் தொடர விரும்புகிறோம். ஆனால் அதைச் செய்வதற்கு, வெளிப்படைத் தன்மைகாணப்படவேண்டும். குறிப்பாக தற்போதைய நிலைமைகள் தீவிரமாக இருக்கும் போது கடினமாகிறது.

கடந்த ஆண்டு இந்திய இராணுவத்துக்கு முக்கியமான உளவுத்தகவலை வழங்கிஎல்லையில்சீனர்களை வெற்றிகரமாகசமாளிக்கஉதவியது தொடர்பாகக் கேள்வி யெழுப்பியபோது அதற்கு பதிலளிப்பதை மறுத்து விட்டார்.

# 2030 இல் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் 70 வீத மின்சார உற்பத்தியே இலக்கு

## ஷெஹான் சேமசிங்க வியூகம்



2030ஆம்ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்கஆற்றலில்70 வீத மின்சாரத்தை உற்பத்தி செய்வதே இலக்கு என நிதி இராஜாங்கஅமைச்சர்ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட காலநிலை சுபீட்ச திட்டம் நாட்டின் காலநிலைஸ்திரமின்மைக்கு மத்தியிலும் தொடர்ச்சியான வளர்ச்சியைக் காட்டுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்தில்நடைபெற்ற ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பொருளாதார மற்றும்சமூகஆணைக்குழுவில் பேசும்போதேஅவர்இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மன்றத்தின் மூலம், நிலையான வளர்ச்சி சவால்களுக்குதீர்வு காண்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

# தரம் 5 புலமைப் பரிசில் மதிப்பளித்தல் நிகழ்வு!





மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு பாடசாலைக் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

வித்தியாலய முதல்வர் க.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆனந்தமயில் நித்திலவர்ணன், தென்மராட்சிக் கல்வி வலய தாபனம் மற்றும் பொது முகாமைத்துவப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் அபிராமி இராஜதுரை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்குமேல்பெற்ற 29 மாணவர்களுக்கும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 74 மாணவர்களுக்கும், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 88 மாணவர்களுக்கும் மதிப்பளிக்கப்பட்டது.

மேலும், அவர்களுக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்கள் மூவருக்கும் இதன்போது சிறப்பு மதிப்பளிப்பு வழங்கப் பட்டது.

# மதுபோதையில் வாகனம் செலுத்தினால் பொலிஸ் பிணை இனிக் கிடையாதாம்

மதுபோதையில் வாகனம் ஓட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்படுபவர்களை பொலிஸ் பிணையில் விடுவிக்காமல் இருப்பதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, குடிபோதையில்வாகனம்ஓட்டுபவர்களை பொலிஸ் பிணையில் விடுவிப்பதற்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அதிகாரம் இருந்த போதிலும், தற்போது அதுஇடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இனிமேல் பொலிஸாரால்கைது செய்யப்படும் மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களுக்கு பொலிஸ் பிணை வழங்காமல் நேரடியாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்கள் ஓட்டிச் செல்லும் வாகனத்தை சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் மூன்றாம் நபரொருவரிடம் ஒப்படைக்கப் பட்டுவந்துள்ளபோதிலும், அது நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னரே வாகனம் விடுவிக்கப்படும்.

போக்குவரத்து டிஐ.ஜி. சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுடனான சந்திப்பில் இந்த விடயம் குறித்த அறிவுறுதல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.03.2023இல் வெளியிடப்பெற்றது.

## நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 13 திங்கட்கிழமை 27.03.2023 கதிர் 10

## பௌத்த ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட்டம்

### யாழ். பல்கலைக மாணவர்கள் இன்று நடத்தினர்

(ந.லோகதயாளன்)

வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலய இடிப்பு மற்றும் கச்சதீவில் புத்தர் சிலை அமைப்பு ஆகியவற்றைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் இன்று கவன வீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் முன்பாக இடம்பெற்ற இ0ப்போராட்டத்தில் பல்கலைக் கழக மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர்.

மண் துறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா, மத வெறியர்களே

2

## தங்கியுள்ள படையினரின் வழிபாட்டுக்காக

# ஒரு சிறு புத்தர் சிலையே கச்சதீவில் இருக்கின்றது

### மெல்ல ஒப்புக் கொள்கின்றது கடற்படை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 27

கச்சத்தீவுப் பிரதேசத்தில் அரச மரம் வளர்த்து புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு அங்கு ஓர் விகாரைக்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று செய்திகள் வெளியாகிய நிலையயில் அங்கு ஒரு சிறிய புத்தர் சிலை கடற்படையினரின் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டுள்ளது என்று கடற்படை உத்தியோகபூரவமாக இன்று ஏற்றுக்கொண்டது.


இது தொடர்பாகக் கடற்படையினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பிரதான நிலப்பரப்பில் இருந்து 50 கடல் மைல் தொலைவில் உள்ள மக்கள் வசிக்காத தீவுகளில் ஒன்று கச்சதீவு. அப்பகுதியின் பாதுகாப்புக்காக கடற்படையின ஒரு குழு அங்கு நிறுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு கடமைகளுக்கு மேலாக, அங்குள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தின்நித்தியகடன்களையும் கடற்படையினரே செய்கின்றனர்.

2



## புதையல் தோண்ட முயற்சித்த பிக்கு உள்ளிட்ட 7 பேர் கைது



புதையல்தோண்டும்நோக்கில் வருகை தந்த பௌத்த பிக்கு ஒருவர் உள்ளிட்ட ஏழு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வலப்பனை – கீர்த்திபண்டாரபுர பகுதியில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து மூன்று புத்தர் சிலைகள், புதையல்,தோண்டப் பயன்படும் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றனர். வலப்பனை – கீர்த்தி பண்டாரபுர பகுதியிலுள்ள பொலிஸ் சோதனைச்சாவடிக்கருகில் சந்தேகத்துக் கிட மான முறையில் திரிந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது பொலிஸார் விசாரணை நடத்தியதில், புதை யல் தோண்டுவதற்காக வந்ததை ஏற்றுக்கொண்டனர்.

கேகாலையிலிருந்து வருகை தந்த பௌத்த பிக்கு ஒருவர் உட்படகாலி, மீரிகமை, தம்புளை மற்றும் பக்கமுன பிரதேசத்திலிருந்து வருகை தந்தவர்களே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களையும், கைப்பற்றிய பொருட்களையும் வலப்பனை நீதிவான் முன்னிலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## மைத்திரியுடன் மீளவும் இணைய நிமல் பேச்சு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி அரசுடன் இணைந்து சுயாதீனமாகச்செயற்படும்அமைச்சர்கள் குழு,மீண்டும்கட்சியில்இணைவது தொடர்பில் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினரே இது தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்று வருகின்றனர்.

இந்தப் பேச்சின் அடிப்படையில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

இது குறித்து சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் தயாசிறி ஜயசேகரவிடம் கேட்டபோது, இவ்வாறான கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன எனவும், அதுநடக்கவேண்டும்எனவும் குறிப்பிட்டார்.

## வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயம் “வட்டமான பர்வத விகாரை”யாக மாற்றம்






வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்திலிருந்த விக்கிரகங்கள் அனைத்தும் துடைத்தழிக்கப்பட்ட நிலையில் அந்த இடத்திறகு ’வட்டமான பர்வத விகாரை’ எனக் கூகுளில் பெயரிடப்பட்டு புராதன பௌத்த ஆலயமாகக் காட்டப்பட்டுள்ளது அம்பலத்திற்கு வந்துள்ளது.

வவுனியா வடக்கு, ஒலுமடு பகுதியில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தை அப்பகுதி மக்கள் பல் நெடுங்காலமாக வழிபடப்பட்டு வந்த நிலையில் தொல்பொருள் திணைக்களம் அது தமக்குரிய இடம் எனத் தெரிவித்து வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறை ஏற்படுத்தி வந்தது.


பொலிஸார் மற்றும் படைத்தரப்பின் ஆதரவுடன் வழிபாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் கட்டுப்பாடுகளைத் தொல்பொருள் திணைக்களம்விதித்திருந்தது. நெடுங்கேணி பொலிஸார் ஊடாக ஆலய நிர்வாகத்தினருக்குஎதிராகநீதிமன்றத்தில் வழக்கும் தாக்கலும் செய்திருந்தது.

இவ்வாறுதொல்பொருள் திணைக்களம் மற்றும் பொலிஸார், பாதுகாப்புத் தரப்பினரின் முழுமையான கண்காணிப்பில் இருந்த வெடுக்குநாறி மலையில் இருந்த ஆதி சிவன் விக்கிரகமும், அதனைச்சூழ இருந்த அம்மன், பிள்ளையார், வேல், சூலம் என்பனவும் இருந்த இடத்தில் இருந்து உடைத்து அகற்றப்பட்டு வழிபாட்டு ஆலயம் முழுமையாகத் துடைத்தழிக்கப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாகக் கூகுளில் குறித்த ஆலயம் இருந்த வெடுக்குநாறிப் பகுதி

2

## மிருசுவில் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு



கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் பகுதியில் இன்று காலை4 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் இளைஞன் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் ஆட்களை இறக்கிவிட்டு வவுனியா நோக்கிப் பயணித்த ஹயஸ் வாகனம் மிருசுவிலில் மரத்துடன் மோதி சிதைந்தது. இதில் சாரதியான குமாரசாமி கஜன் (வயது 27) உயிரிழந்தார். மிருசுவில்இராணுவமுகாமை அண்மித்த ஏ-9 வீதியில் வீதியோரம் காணப்பட்ட மரத்துடனேயே வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

உயிரிழந்தவரது சடலம் கொடிகாமம் பொலிஸாரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது

## அனைவரும் ரணில் பக்கமே அடுத்து ஐ.தே.க. ஆட்சிதான்

### அகிலவிராஜ் அதீத நம்பிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் அனைவரும் திரண்டுள்ளனர். எனவே, அடுத்த ஆட்சி ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலேயே மலரும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் முன்னாள்அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

சிங்கப்பூரை லீகுவான்

2



## பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கள் போராட்டம்

### உணவு தவிர்ப்பீல் குதித்தனர் அதன் ஊழியர்கள்

இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அனைத்துத்தொழிற்சங்கங்களும் இணைந்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

மகா சங்கத்தினரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்ற பின்னர் இன்று காலை முதல் தமது போராட்டத்தினை கொலன்னாவ பெற்றோலிய விநியோக பகுதியில் அவர்கள் தொடங்கினர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் பந்தலசமன்குமார இதுபற்றித் தெரிவித்ததாவது:

இலபமீட்டும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை மீண்டும் தனியாருக்கு விற்பனை செய்யும் தீர்மானத்தினை யாரைக் கேட்டு முன்னெடுத்தார்கள்.

2

## தொழிற்சங்கங்களின் பொறுமையை குறைத்து மதிப்பிட்டுவிட வேண்டாம்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

தொழிற்சங்கங்களின் பொறுமையைக் குறைத்து மதிப்பிட்டுவிடவேண்டாம். எமது கோரிக்கைகளுக்காக தீவிர தொழிற்சங்க நடவடிக்கைகளைமுன்னெடுக்கவும் தயங்கப்போவதில்லை என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித்தஅளுத்கேதெரிவித்தார்.

கொழும்பில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது ஒருநாள்

2

## டிசெம்பருக்கு முன் தேர்தல் வரும் என்கிறார் ராஜபக்ஷ

எந்த தேர்தலுக்கும் முகங்கொடுப்பதற்குதயாராக உள்ளதாக பொது ஜன பெரமுனவின் மூத்த தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக் தெரிவித்துள்ளார்.

அபயராம விகாரையில் இன்று நடைபெற்ற

2

## தீர்வின்றேல் போராட்டம் தொடரும் பல்கலை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

பல்கலைக்கழகவிரிவுரையாளர்கள் சங்கத்தின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் 19ஆவது நாளாக இன்றும் தொடர்ந்தது. உரிய தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டம் தொடரும் என்றும் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த ஆட்சியின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் குதித்தனர். நாடு முழுவதும் உள்ள தொழிற்சங்கங்கள் மார்ச் 15 போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முன்னிருந்து பல்கலைகழக ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதியின் வாக்குறுதியைத் தொடர்ந்து மற்றைய தொழிற்சங்கங்கள் தமது போராட்டத்தைத் தற்காலிகமாகநிறுத்தியபோதும் பல்கலைக் கழகஆசிரியர்சங்கம் அதனை நிறுத்த வில்லை.

“நாம், தொடர்ச்சியாக போராட்டத்தினை முன்னெடுத்து வந்திருந்த நிலையில் கடந்தவெள்ளிக்கிழமையன்று கூட்டமொன்றை

2

## டிசெம்பருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கழ்வொன்றில் கலந்துகொண்டு திரும்பும் போது, செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி ழுப்பினர். அப்போதே அவர் இதனைக் றிப்பிட்டார். அவரிடத்தில் ஊடகவியலாளர்கள் ழுப்பிய கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:

கேள்வி: எதிர்கால அரசியல் செயற்பாடுகள் வ்வாறு இருக்கப்போகின்றன?

பதில்: அரசியல் செயற்பாடுகளை வெற்றிகரம க முன்னெடுத்துச் செல்கின்றோம். அது ாதகமான நிலைமையிலேயே முன்னகர்கின்றது.

கேள்வி: பொது ஜன பெரமுன பிளவுபட்டு இருக்கையில் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் வ்வாறு அமையப்போகின்றன?

பதில்: அது தொடர்பில் கவலைப்படாதீ–கள். நேரம் வரும்போது அனைவரும் ன்றிணைவோம்.

கேள்வி: தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதாகக் டுமையான விமர்சனங்கள் முன்வைக் ப்படுகின்றதல்லவா?

பதில்: நான் நினைக்கின்றேன் டிசெம்பர் ாதத்திலோ அல்லது அதற்கு முன்னதாகவே தேர்தல் நடத்தப்படும். அது எனது எதி பார்ப்பாகவுள்ளது.

கேள்வி: தற்போதைய நிலைமையில் தேர்தல் அவசியமா?

பதில்: தேர்தல் வேண்டாம் என்று கூறும் அரசியல் தலைவர்கள் இருப்பார்களா?

கேள்வி: ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத்தேர்தல் நடத்தப்படவுள்ளதா?

பதில்: எந்த தேர்தலை நடத்தினாலும் அதற்கு முகங்கொடுப்பதற்கு நாம் தயராகவே உள்ளோம்.

கேள்வி: நாட்டின் பொருளாதார நிலைமை கள் எவ்வாறு செல்லப்போகின்றன?

பதில்: நாங்களும் அதனையே தான் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்

## தொழிற்சங்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாழிற்சங்கப் போராட்டத்தினை அடுத்து ஜனாதிபதியின் செயலாளர் எம்முடன் பேச்சு நடத்தினார். அதன்போது எமது கோரிக் கைகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத் தின் பணிப்பாளர் சபையின் கடனை அதன் பணிப்பாளர் சபை அனுமதித்ததும் மார்ச் 22 எம்மோடு மீண்டும் பேச்சு நடத்துவதாக உறுதி அளித்தார்.

அத்துடன் அந்தப் பேச்சுக்களில் எட்டப் படும் இணக்கபாடுகளுடன் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசலாம் என்றும் தெரிவித்திருந் தார். ஆனால் தற்போது வரையில் எம்முடன் ந்தப் பேச்சும் நடத்தப்படவில்லை. ஆகவே தொழிற்சங்கங்களின் பொறுமையை, அமைதியை குறைத்து மதிப்பிட்டுவிடவேண் டாம் என்று அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நாம், ஜனாதிபதி உள்ளிட்ட ஆட்சி யாளர்களை எச்சரிக்கின்றோம். பெரும் தொழிற்சங்கப் போராட்டத்தினை முன்னெடுக்க நாம் பின்னிற்கப்போவதில்லை – என்றார்.

## தீர்வின்றேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடத்தினோம். இந்தப் போராட்டத்தின் எதிர்காலம் தொடர்பில் எமது சங்கத்தில் ஆராய்ந்தோம். ஆட்சியாளர்கள் திங் கட்கிழமைக்குள் (இன்றையதினம்) சதக மான சமிக்ஞையை வெளியிடாதுவிட்டால் தொடர்ந்தும் போராடுவது என்று தீர் மானித்துள்ளோம்" என்றார் பல்கலைககழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஷ்யாம் பன்னஹெக்க.

## பெற்றோலிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையில் எரிபொருள் விநியோகத் திற்கான நிறுவனங்களிடையே போட்டியை ஏற்படுத்தும் வகையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை விற்க இருப்பதாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் தெரி வித்திருக்கிறார்.

2003ஆம் ஆண்டும் இவ்வாறே தெரிவித் தனர் இலங்கையில் போட்டியை ஏற் படுத்தப்போவதாக கூறினார்கள். அப்போது இந்திய பெற்றோலிய நிறுவனத்தினைக் கொண்டு வந்தார்கள். அதன் பின்னர் போட்டியாளர்களை உருவாக்கி பெற்றோலிய பொருட்களின் விலையைக் குறைக்க முடியாது என்பதை செயற்பாட்டின் ஊடாக உணர்ந்து, ஏற்றுக்கொண்டனர்.

எரிபொருள் விநியோகத்தில் போட்டியா ளர்களை உள்ளீர்த்து விலையைக் குறைப் பதற்கான முறைமை என்ன என்பதை இந்த ஆட்சி எமக்குத் தெளிவுபடுத்தவேண்டும். முன்னர் இடம்பெற்றதைப்போன்று தமது நண்பர்களுக்கும், நெருக்கமானவர்களுக்கும் விநியோக உரிமத்தினை வழங்குவதற்காக வும், தரகுப் பணத்திற்காவுமே அமைச்சர் இவ்வாறு செயற்படுகின்றார் – என்றார்

## வெடுக்குநாறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வட்டமான பர்வத விகாரை' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு புராதன பௌத்த ஆலயமாகக் காட்டப்பட்டுள்ளது.

திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்படும் குறித்த செயற்பாடுகள் தொடர்பில் சைவ மக்கள் கவலையும் ஆத்திரமும் வெளி யிடுகின்றனர்.

## அனைவரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீட்டெடுத்தார். மலேசியாவை மகாதீர் முகமது கட்டி யெழுப்பினார். தனி நபர்களின் தூரநோக்கு சிந்தனைக்கு பின்னால் அனைவரும் திரண்டனர். தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் அனைவரும் திரண்டுள்ளனர். எனவே, அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே மக்கள் ஆதரவு வழங்குவார்கள். ஐ.தே.க. தலைமையி லேயே புதிய ஆட்சி மலரும். – என்றார்.

## கொழும்பு பேராயரின் மனுவை பரிசீலிக்க நீதிமன்றம் முடிவு

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதி மன்றம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதி பதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித ராஜகருணா மற்றும் தம் மிக்க கணேபொல ஆகியோர் முன்னிலையில் மேற்படி மனு நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு வந்தது.

இதன்போது உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், மனுவை மே மாதம் 9 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும் தீர்மானித்தது.

பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆணைக் குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளதாக ம னுதாரர் தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை என சுட்டிக்காட்டிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவற்றை நடைமுறைப்படுத்த சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரியுள் ளார்.

## ரயில் மோதியதில் மாணவன் சாவு

கண்டி முல்கம்பொல மேம்பாலத் திற்கு அருகில் ரயிலில் மோதி 16 வய–துடைய பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று பதுளையில் இருந்து கண்டி நோக்கி பயணித்த ரயிலில் மாணவர் மோதி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வந்த மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விசாரணையில் மாணவன் தனது கைப்பேசியில் பேசிக்கொண்டு பாதசாரிகள் பயணிக்கும் மேம்பாலத்தில் பயணிக்காமல் ரயில் தண்டவாளம் ஊடாக பயணிக்கும் போது ரயிலில் மோதுண்டு உயிரிழந்தது தெரியவந்துள்ளது.

சடலம் கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒரு சிறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை கடற்படை பௌத்த சங்கத்தின் முழுப் பங்களிப்புடன் கட்டியெழுப்பப்பட்ட கச்சதிவு புனித அந்தோனியார் தேவாலயத் தையும் கடற்படையினரே பாதுகாத்து வருகின்றனர். புனித அந்தோணியார் தேவாலயத்தின் வருடாந்த பெரு விழாவைத் தவிர, இந்தத் தேவாலயத்தை தினமும் சுத்தம் செய்து, விளக்குகள் ஏற்றி, மிகுந்த பக்தியுடன் அங்குள்ள கடற்படையினர் பராமரிக்கின்றனர்.

கச்சதீவு இணைப்பில் பணிபுரியும் கடற்படையினர்களில் பெரும்பான்மை யானவர்கள் பௌத்தர்கள் என்பதால், அவர்களின் வழிபாட்டுக்காக, ஒரு சிறிய புத்தர் சிலை கடற்படையினரின் இல்லத்தி ற்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது.

கச்சதீவில் தேவாலயத்தைத் தவிர வேறு எந்த நிரந்தர கட்டுமானமும் செய்ய முடியாது, மேலும் கடற்படையினர்கூட அங்கு தற்காலிகமாகக் கட்டப்பட்ட கட்டடங்களி லேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

புனித அந்தோனியார் தேவாலயத்தைத் தவிர, இந்தக் கச்சத்தீவில் வேறு எந்த மத வழிபாட்டுத்தலமும் இல்லை என்றும், எதிர்காலத்தில் எந்த ஒரு மத வழிபாட்டுத் தலத்தையோ உருவச் சிலைகளையோ கட்டும் உள்நோக்கம் கடற்படைக்கிடையாது என்பதையும் ஆணித்தரமாக தெரிவிக்கின் றோம் – என்றுள்ளது.

எனினும் கச்சதீவில் உள்ள பௌத்த வழிபாட்டிடம் தொடர்பில் வெளியான ஒளிப்படங்களில் உள்ள அரச மரம், இரு புத்தர் சிலைகள் உள்ளிட்ட கட்டுமானங்கள் அனைத்தும் படத்தில் உள்ளபடியே அமை க்கப்பட்டுள்ளன என்றும் அவை சிறியவை அல்ல என்றும் அதனை நேரில் பார்த்த தரப்பினர் உறுதிப்படுத்துகின்றனர். கடற்படையினர் கூறுவது போன்று அவை சிறிய சிலைகள் அல்லவென்றும், அவை விகாரையாக இல்லாதபோதும் கணிசம ான அளவு புத்தர் சிலைகளே அங்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்தத் தரப்புகள் காலைக்கதிர் பத்திரிகையிடம் உறுதிப்படுத்தின.

இந்த உருவச் சிலைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்ம லநாதன் நாடாளுமன்றத்திலும் கேள்வி எழுப்பியிருந்தார். அதன் பின்னரே இது சர்ச்சைக்குரிய விவகாரமாக உருவெடுத்தது.

# வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய இடித்தழிப்பை தமிழ் எம்.பிக்கள் கண்டுகொள்ளாதமை வேதனை

### முன்னாள் எம்பி சரவணபவன் விமர்சனம்

வடக்கில் அண்மைக்காலமாக தொடரும் திட்டமிட்ட பௌத்தமயமாக்கலின் தொடர்ச் சியான செயற்பாடே வெடுக்குநாறிமலை சிவலிங்கம் இடித்தழிப்பாகும். இங்குள்ள பிரச்சினைகளை தாம் ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டுகொள்வதில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டினர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடுக்கு நாறிமலை ஆதிசிவலிங்கம் உடைக்கப்பட்டமை தொடர்பாக நேரடியாக சென்று களநிலைமை களை ஆராய்ந்து ஆலய பூசகருடன் கலந்துரையாடிய பின் கருத்து தெரிவித்த நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

அப்பட்டமாக தங்களுடைய சர்வதி கார நிலையைத் தமிழ் மக்களுக்கு மேலே துணித்துஎங்கெங்கெல்லாம் தமிழ் மக்களின் பூர்வீக இடங்களை ஆக்கிரமித்து அதனைப் பௌத்தமயமாக்குவதற்கு இடம்பெறுகின்ற செயற்பாடுகளில் ஒன்றாகவே இன்று இந்த வெடுக்குநாறிமலையினுடைய சிவலிங்கம் உடைத்து புதருக்குள் எறியப்பட்டுள்ளது.

வெடுக்குநாறிமலை சிவலிங்கம் என்பது ஒரு மலையிலே காணப்படுகின்றது. இந்த மலையிலே தங்களுடைய புத்தர் சிலையை வணங்க வேண்டும் என்பதற்காக மிகுந்த ஆவலுடன் தொடர்ச்சியாக மேற்படி பகுதியை பல்வேறுபட்ட இடர்களையும் இன்னல்களையும் கொடுத்து ஆக்கிரமித்து வருகின்றார்கள். குறிப்பாக 1960 ஆம் ஆண்டுகள் முதல் பெரிய நிலப்பரப்புகளில் இந்த முல்லைதீவு மாவட்டத்திலே – வயல் நிலங்களிலே – விவசாயத்தை மேற்கொண்டு விவசாயிகளினுடைய பல நிலங்கள் இன்று பறி முதல் செய்யப்பட்டுள்ளன. சுமார் 20, 30 இடங்களினுடைய பெயர்களை நான் இந்த வெடுக்குநாறிமலை பகுதியில் மக்களுடன் கலந்துரையாடிய பொழுது இவ்வாறு அபகரித்து இருப்பதை மக்கள் எனக்குக் கூறி இருந்தார்கள்.

தமிழ் பௌத்தத்தை கூட ஏற்பதற்கு அவர்கள் தயாராக இல்லாத நிலையில் முறையான – நீதியான – ஆராய்ச்சிகளுக்கும் அவர்களின் தயாரில்லை. அந்த வகையில் சிங்கள பௌத்தமயமாக்கலை இந்த நாடு பூராகவும் மேற்கொள்வதற்கு இவர்கள் செயற்ப்பட்டுகொண்டிருக்கின்றார்கள்.

ரணில் விக்கிரமசிங்க கூட கூறியிருந்தார் ஆயிரம் புத்தர் சிலைகளை வைப்பேன் என்று. இவர்களுடைய அறிவு போதாமையின் வெளிப்பாடே இந்தச்செற்பாடுகளாகும்.



இருப்பினும் இவ்வாறு புத்தர் சிலைகளை அமைப்பதற்கு மிகச் சாதுரியமாக அதனை நிலைநிறுத்துவதற்கு அரச படைகள் அதனுள் முக்கியமாக இந்த பொலிஸாரும், இராணுவமும் செயற்படும் நிலையில் குறிப்பாக தொல்பொருள் திணைக்களம் இந்த திணைக்களம் எங்கிருந்தது என்றே தெரியாத ஒரு திணைக்களம் வடக்கு மாகாணத்திலே எங்காவது ஓர் இடத்தில் அரசமரம் முளைத்து விட்டால் அதனை வடமாகாணத்திலே தமக்குரிய பகுதியாக அடையாளப்படுத்தி வருகின்றார்கள்.

அவ்வாறு சம்பந்தமே இல்லாது அடை யாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் ஒன்றாகதான் இந்த வெடுக்குநாறிமலையும் வந்திருக்கின் றது. ஆனால் நான் சந்தித்த வெடுக்கு நாறி மலையின் ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பூச கர் எனக்கு கூறுகின்றார் நான் இவ்வாலயத் தில் ஐந்தாவது சந்நிதி பூசகர் என்று மே லும் குறித்த பூசகருடன் கலந்துரைய–ாடியதற்கு அமைவாக அதன் வரலாறும் அதன் பார்ப்பரியமும் பன்னெடுங்கால மாக பேணப்பட்டு வருகின்றதை என்னால் உணர முடிந்தது. இவ்வாறான நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்ட சிங் களகுடியேற்றத்தையும் திட்டமிட்ட பௌத்தமய மாக்கலையும் மேற்கொள்ளுகின்றார்கள். மாவட்டத்தினுடைய எல்லை கிராமங் களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு கிராமங்களினுடைய பெயர்களும் மாற்றப்பட்டுவிட்டன. மிகவும் வளம் மிகுந்த தமிழர்களினுடைய பூர்வீக வரலாறு மிகுந்த முல்லைதீவு மண், கண் முன்னே பறிபோய் கொண்டிருக்கின்றது. எங்களுடைய இனத்தி ன் பரம்பலைக்கூட அவர்கள் தங்களுடைய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் மாற்றி அமைக்கின்றார்கள். இவ்வாறு தமிழர்க ளையும் சிங்களவர்களையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இணைத்து தமிழர்களை முல்லைதீவு மாவட்டத்தில் சிறுபான்மை யினராகக் காட்ட முனைகின்றார்கள்.

நான் ஒலுமடுவிற்க்கும் சென்றிருந் தேன் அங்கு இருக்கக்கூடிய வெடுக்குநாறி மலை ஆலய நிர்வாக சபையினருடன் கலந்துரையாடிய நிலையில் ஆலய நிர்வாக சபையினரை வெடுக்குநாறிம லைக்குச் செல்வதற்கு நீதிமன்ற தடை விதித்து இருக்கின்றது. பூசகர் மட்டும் சென்று பூஜை செய்யலாமென்று இருக்கின்றது. குறிப்பாக இவ்வாறான பிரச்சினைகள் எழுகின்ற பொழுது இவர்களுக்காக குரல் கொடுப்பதற்காக வன்னி மாவட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல் வதில்லை என்று அந்தப் பகுதி வாழ் மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

இது மிகவும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகக் காணப்படுகிறது. இதுவரைக்கும் அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களோ அவர்களுடைய கட்சிக ளுக்காக வேலை செய்பவர்களோ செல் லவில்லை. அந்த மக்கள் நான் நேரடியாக சென்ற பொழுது முன்வைத்த குற்றச்சாட்டாக பிரச்சினைகள் இடம்பெறுகின்ற பொழுது தாம் ஆதரித்த தமிழ்தேசியக் கூட்டமைப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருவதில்லை என்றும் குரல் கொடுப்ப தில்லை என்றும் தெரிவித்து இருந்தார்கள். முன்னின்று குரல் கொடுக்க வேண்டியவர்கள் முன்னின்று குரல் கொடுக்க வேண்டும்.

நீதிமன்றம், வெடுக்கு நாறிமலைக்கு செல்வதற்கு அனுமதி வழங்கினாலும் பூசகர் செல்வதற்கு பொலிஸார் தடுத்து நிறுத்துகின்றனர். பூசகர் செல்லாது விடினும் அரச நிகழ்ச்சி நிரலுடன் பலர் சென்று வருகின்றார்கள்.

இப்பொழுது இங்கு தகவலாக ஒன்று கிடைத்தது இந்தச் சம்பவம் இரண்டொரு நாள்களுக்கு முன்னரே இடம்பெற்றிருப்ப தாகவும் மற்றுமொரு பாதையால் ஜீப்ரக வாகனத்தில் சிலர் வந்து சென்றனர் எனவும் இதற்கு பாதுகாப்பாக பொலிஸார் வந்து சென்றனர் எனவும் கூறப்படுகின்றது.

ஆகவே, இவ்வாறு நிகழ்ச்சி நிரலிற்–குட்பட்டே இது இடம்பெறுகிறது. பொலிஸின் ஆதரவு, தொல்பொருள் திணைக்களத்தின் நீதியற்ற செயற்பாடு இந்த தொல்பொரு ளியல் திணைக்களத்தின் சின்னத்தை பார்க்கின்ற பொழுதே விளங்குகிறது சம த்துவமற்ற ஒரு மத அடிமைச் சின்னமாக விளங்குகிறது. இந்த இடத்திலே என்னுடன் பேசிய வயது முதிர்ந்த ஒருவர் இதற்காக போராட்டம் செய்யவேண்டும் எமது எதிர்ப்பை பதிவு செய்யவேண்டும் என கூறினார். தனது பிள்ளைகளையும் போராட்டத்தில் இழந்தவர் வடமராட்சி மண்ணை சேர்ந்தவர் ஆனால் மண் பற்றுள்ளவர்களாக இருக்கின்றார். இவருடைய சிந்தனை அனைவருக்கும் மனதில் அடிப்படையாக வரவேண்டும். – என்றார்.

## நிமோனியா காய்ச்சலால் 7 மாத குழந்தை உயிரிழப்பு

யாழில் நிமோனியா காய்ச்சலால் பாதி க்கப்பட்ட 7 மாத குழந்தை உயிரிழந்துள்ளது.

யாழ். பண்ணாகத்தை சேர்ந்த 7 மாத குழந்தை சுகவீனம் காரணமாக வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் இறப்பு விசாரணையினை தெல்லிப்பழை மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது குழந்தை நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாக உடற் கூற்று பரிசோதனையில் அறிக்கையிடப்பட் டுள்ளது.

## திகாவின் மகன் களத்தில்



வட்டகொடை, மடக்கும்புர அமர்நாத் விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்–யப்பட்டிருந்த கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெ லியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான மயில்வாகனம் உதயகுமார் கலந்துகொண்டார்.

அத்துடன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் அமர்நாத் விளைய–ாட்டுக் கழகத்தின் தலைவருமான பழனி திகாம்பரத்தின் மகனான ராகுல் திகாம்பரமும் பங்கேற்றார்.

சோ. ஸ்ரீதரன், நகுலேஸ் உட்பட தொழிலாளர் தேசிய சங்க முக்கியஸ்தர்க ளும் இதில் பங்கேற்றிருந்தனர்.

## பௌத்த ஆக்கிரமிப்பை....




(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மதவாதத்தை தூண்டாதீர், காவிகளின் அட்டகாசத்திற்கு காக்கிகளே துணை, நீதித்துறையை அடக்குகின்றதா பௌத்த பேரினவாதம்? போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கியவாறு மாணவர்கள் பல்கலைக்கழகத்தின்

"தமிழ் மண்ணில் திருகோணமலை கிண்ணியாவில் இருந்து, குருந்தூர்மலை, வெடுக்குநாரி, கொக்குத்தொடுவாய் என அழிப்பு தொடர்கின்றது. தொல்லியல்த் தி ணைக்களம் தமது பணி என்னவென்றே தெரியாது ஒரு மதம் வளர்க்கும் அமைப்பாக செயல்படுகின்றது" என போராட்டத்தில் பங்கு பற்றிய மாணவர் ஒருவர் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# காணாமற்போனோர் தொடர்பில் பிழையான கருத்துக்கள் தெரிவிப்பதை நிறுத்தவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவிப்பு




சர்வ மக்கள் கட்சியின் தலைவி உதயகலா காணாமல் போனோர் தொடர்பில் பிழையான கருத்துகளை தெரிவிப்பதை உடனடியாக நிறுத்தி, அவர்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும் என கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவிலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி செல்வராணி –

வடக்கு கிழக்கில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தமது உறவுகளைப் பறி கொடுத்துவிட்டு அலைந்து திரிந்து தமது உறவுகளைத் தேடி வருகின்றனர்.

இறுதி யுத்த காலப்பகுதியில் ஆயிரக்கணக்கானோர் இராணுவத்தினரிடம் குடும்பம் குடும்பமாக சரணடைந்த நிலையில் காணாமல் போனார்கள்.

இதே போன்று வீடுகளிலிருந்து கடத்திச் செல்லப்பட்டும் காணாமல் போனார்கள்.

தனது உறவுகளைத் தொலைத்து விட்டு கண்ணீருடன் தேடிவரும் நிலையில் எங்கோயிருந்து வந்து அரசாங்கத்தின் அடிவருடி போல் இருந்து கொண்டு காணாமல் போனவர்கள் இல்லை, போரில் இறந்து விட்டனர். காணாமல் போனவர்கள் என்பது பொய் என்பது போன்ற கருத்துகளை தெரிவித்து வரும் சர்வ மக்கள் கட்சியின் தலைவி உதயகலாவின் கருத்துகளை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இன்று சர்வதேசமே இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வரும் நிலையில் யாரோ போடும் எலும்புகளுக்கு வாலாட்டும் உதயகலா போன்றவர்கள் எம்மை விமர்சிப்பதை நிறுத்தவேண்டும்.

காணாமல்போனோர் தொடர்பில் பிழையான கருத்துக்களை தெரிவிப்பதை நிறுத்த வேண்டும்! காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

எட்டு மாவட்டங்களிலும் உறவுகளை தொலைத்து விட்டு போராடுபவர்களை கொச்சைப்படுத்தி வருவதை நிறுத்தி அவர்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும்.

எம்மைப்பற்றி கதைப்பதற்கு உதயகலாவுக்கு எந்த தகுதியுமில்லை. மோசடியில் ஈடுபட்டு தப்பிச் சென்று மீண்டும் இலங்கை வந்து யாருடைய தேவையை நிறைவேற்றுவதற்காக இவ்வாறான கருத்துகளை தெரிவித்து வருகின்றார்'. – எனத் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தை குழப்புவதற்காகவே அரசாங்கத்துடன் இணைந்து சர்வ மக்கள் கட்சியை சேர்ந்த உதயகலா என்பவர் பொய்யானதும் உண்மைக்கு புறம்பான பல தகவலை வெளியிட்டு கபட நாடகம் ஒன்றை அரங்கேற்றியுள்ளார் என வவுனியா மாவட்ட வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் சிவானந்தன் ஜெனிதா குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தினர் யாழ். ஊடக அமையத்தில் ஏற்பாடு செய்திருந்த ஊடகசந்திப்பில் இவ்வாறு குற்றம் சுமத்தியிருந்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில் –

யுத்தம் இடம்பெற்ற காலத்திலே தமிழினத்தின் துரோகியாக காணப்பட்டிருந்த ரணில் விக்ரமசிங்க இன்றும் துரோகத்தனமான நரி தந்திரமான செயல்களை முன்னெடுத்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்தும் முயற்சியை தற்போது மீண்டும் முன்னெடுத்துள்ளார். உதயகலாவே தனது கணவர் கடத்தப்பட்டிருந்தார் எனவும் இறந்து விட்டார் எனவும் கூறியிருந்தார் எனவும் தற்போது தனதுகணவர்இறக்கவில்லைஎன்றும் உண்மைக்கு புறம்பான செய்தியை வெளியிட்ட ஊடகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக குறிப்பிடுகின்றார்.

இதுரணில்அரசுடன்இணைந்து முன்னெடுக்கும்ஒருகபடநாடகம்.நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்தபோதும்காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் வாழ்வாதாரத்துக்காக போராடவில்லை என்றும் தமது உறவுகளை மீட்பதற்காக சர்வதேச நாடுகளின் உதவியை கோரியே இன்றுவரை போராடுவதாகவும் சிவானந்தன் ஜெனிதா மேலும் தெரிவித்துள்ளார்.

# அம்பாந்தோட்டை துறைமுகம் குறித்து அமெரிக்காவுடன் தொடர் பேச்சுக்கள்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக சீனாவுடனான ஈடுபாடுகள் குறித்தும் இலங்கை அமெரிக்காவுடன் தொடர்ச்சியாக பேச்சுகளை மேற்கொண்டுவருகின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹவார்ட் பல்கலைக் கழகத்துடனான மெய்நிகர் உரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா இராணுவநோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் என்ற அச்சத்தை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

துறைமுகம் சீனாவிற்கு சொந்தமானது இல்லை எங்களுக்கே சொந்தம் துறைமுகத்தின் செயற்பாடுகளுக்கான பொறுப்பை நாங்கள் சீன வர்த்தகர்களிடம் வழங்கியுள்ளோம் என தெரிவித்துள்ள ஜனாதிபதி கொழும்பு துறைமுக அதிகார சபையால் அதனை நிர்வகிக்க முடியாததன் காரணமாகவே சீன வர்த்தகர்களிடம் கையளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் பெரும் இழப்பை நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, சீன வர்த்தகர்களை தவிர வேறு எவரும்; அந்த துறைமுகத்தை பொறுப் பேற்க முன்வரவில்லை அதனை மூடுவது மாத்திரமே எங்களுக்கான ஒரே வழியாகக் காணப்பட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பை இலங்கையே கையாள்கின்றது இலங்கைகடற்படையின் தென்பகுதிக்கான கட்டளைபீடம் அம்பாந்தோட்டை துறைமுகத்திலேயே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா ஜப்பானின் பல கப்பல்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்து சென்றுள்ளன. அந்தத் துறைமுகம் இராணுவ ரீதியில் பெறுமதியற்றது சீன அதனை இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்தப்போவதில்லை என உறுதியளித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அதனை செய்ய முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் துறைமுகம் தொடர்பில் நாங்கள் அமெரிக்காவுடன் தொடர்ச்சியாக கலந்தாலோசனையில் ஈடுபட்டுள்ளோம் சீனாவையும் கையாள்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஆபிரிக்காவிலும் வங்காள வளைகுடாவிலும் சீனா உருவாக்கிவரும் துறைமுகங்களைப் பார்க்கும்போது வர்த்தக நடவடிக்கைகளைப் பொறுத்தவரை சீன துறைமுகம் முக்கியமானதாக விளங்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

துறைமுகத்தை இராணுவநோக்கங்களுக்காக சீனா பயன்படுத்தும் என நான் கருதவில்லை. இந்தியா அமெரிக்காவை எதிர்கொள்வதற்கு சீனாவிடம் இந்துசமுத்திரத்தில் போதுமான யுத்தக் கப்பல்கள் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவுடன் கூட்டணி அமைக்க தீர்மானம் இல்லை

## அடித்துக் கூறுகின்றார் சாகர



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணியமைத்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றது. ஜனாதிபதி தேர்தலில் தனித்து பொதுஜன பெரமுன போட்டியிட வேண்டும் என கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கியுள்ளோம். அரசியல் கொள்கை ரீதியில் இரு தரப்பிற்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொதுஜனபெரமுன கொள்கை அடிப்படையில் செயற்படும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை தடுக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகித்ததாக எதிர்க்கட்சிகள் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது. நாளை தேர்தல் இடம்பெற்றாலும் போட்டியிடத் தயாராகவுள்ளோம். தேர்தலை விரைவாக நடத்துமாறு குறிப்பிடும் எதிர்க்கட்சிகள் தான் தேர்தலை ஏதாவதொரு வழியில் பிற்போடுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இழுபறி நிலையில் உள்ள பின்னணியில் தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அரசமைப்பின் பிரகாரம் 2024 நவம்பர் மாதத்துக்குப் பின்னரே ஜனாதிபதி தேர்தல் நடத்தப் படும்.

ஆகவே ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகத் தற்போது அவதானம் செலுத்துவது அவசியமற்றது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும்,ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணியமைத்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளன என வெளியாக செய்தி அடிப்படையற்றது. ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தனித்து போட்டியிட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகள் வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும். கட்சியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

# மாணவி பாலியல் தொல்லை 12 வயது மாணவன் கைது

கம்பஹா, பல்லேவெல பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் ஏழாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் பன்னிரெண்டு வயது மாணவன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பல்லேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மேலும் ஐந்து மாணவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலை நாள்களில் இந்த சம்பவம் நடந்துள்ளது. பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானதாகக் கூறப்படும் மாணவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும், மாணவியின் தாயார் மேற்கு பொலிஸ் நிலையத்தின் வடக்கு பிரிவு குழந்தைகள் மற்றும் மகளிர் பணியகத்தின் பொறுப்பதிகாரியாக பதவி வகிக்கும் பொலிஸ் பரிசோதகர் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

12 வயதுடைய இந்த மாணவன் பாடசாலை மைதானத்தில் உள்ள கழிவறைக்கு அருகில் உள்ள மரத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்தார் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மாணவனிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது குறித்த மாணவன் பாடசாலையில் அமைதியாகவும், நிதானமாகவும் இருந்தமை தெரியவந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இந்த பாரதூரமான சம்பவத்தை மறைக்க ஆசிரியை ஒருவர் கடுமையாக முயற்சிப்பதாக கூறப்படுகிறது. பொலிஸ் பொறுப்பதிகாரியாக உள்ள மாணவியின் தாயாரை இந்த ஆசிரியை பலமுறை கைத்தொலைபேசியில் அழைத்து இந்த சம்பவத்தை மேற்கொண்டு நடத்த வேண்டாம் என அழுத்தம் கொடுத்துள்ளார் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# நாட்டின் சட்டவிரோத மணல் அகழ்வுகளால் கண்ணிவெடிகளை அகற்றுவதில் நெருக்கடி

## பூநகரி பிரதேச செயலர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி முகமாலை கிளாலி மற்றும் வேம்பெடுகேனி ஆகிய வெடி பொருள் ஆபத்தான பிரதேசங்களில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வுகளால் நிலக் கண்ணிவெடிகளை அகற்றுவதில் நெருக்கடி நிலை கானப்படுவதாக பூநகரி பிரதேச செயலாளர் எஸ். கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முகமாலை, கிளாலி மற்றும் வேம்பெடுகேணி ஆகிய பகுதிகள் ஆபத்தான வெடி பொருள்கள் அடையாளம் கானப்பட்ட பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் வெடிபொருள்கள் அகற்றும் பணிகள் சர்வதேச தொண்டு நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

கடந்த காலங்களில் மேற்படி பகுதிகளுக்குள் சென்ற பலர் உயிரிழந்ததுடன் உடல் அவயங்களையும் இழந்துள்ளனர். அத்துடன் பெருமளவான கால்நடைகளும் உயிரிழந்துள்ளன.

இவ்வாறான பிரதேசங்களில் தற்போது தொடர்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருவதாகவும் குறித்த பகுதிகளிலுள்ள வீதிகள் சேதமடைந்து வருகின்றமையுடன் கடல்நீர் உட்புகும் அபாயம் கானப்படுவதாகவும் பல்வேறு தரப்பினரும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மிதிவடிகள் மற்றும் வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளிலிருந்தும் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு மேற்படி மணல் வெளியிடங்களுக்கு செல்லப்படுவதாகவும் மிதிவடிகள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளிலே இருக்கின்ற அடையாளக் குறியீடுகளை அகற்றிவிட்டு அந்த இடங்களிலே மணல் அகழ்வுகளை மேற்கொள்வதாகவும் கண்ணிவெடிகளை அகற்றும் தொண்டு நிறுவனங்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

# மதுபோதையில் கடமையில் ஈடுபட்ட கான்ஸ்டபிள் பதவி இடைநிறுத்தம்

குருநாகல் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் மதுபோதையில் கடமையில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டின் பேரில் குருநாகல் தலைமையக பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி மாலை 6 மணியளவில் கடமையை பொறுப்பேற்ற அவர் மதுபோதையில் கடமையாற்றினார் எனக் குருநாகல் தலைமையக பொலிஸ் பரிசோதகருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபரான கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிளை குருநாகல் போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்தியரிடம் முன்னிலைப்படுத்தியதில் அவர் மதுபோதையில் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு, பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் நாவலரை மதித்துநடக்க வேண்டும்

## கொழும்பு நாவலர் சபை வலியுறுத்தல்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை யாழ். மாநகர ஆணையாளர் மதித்து செயற்பட வேண்டுமென ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்குரிய நாவலர் கலாசார மண்டபத்திலே நாவலர் பணியை நாவலர் பெருமான் பிறந்த இருநூறாவது அகவை ஆண்டு நிறைவுடன் முன்னெடுத்த வண்ணம் உள்ளது.

பல இழுபறிகளுக்குப் பின்னர் இரு தரப்பு ஒப்புதல்களோடு நாவலர் கலாசார மண்டபத்திலே இணைந்த பணியை முன்னெடுப்பது என்ற முடிவின் அடிப்படையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் யாழ். மாநகர சபை நிர்வாகமும் இணைந்து செயற்படுவது என்ற முடிவு எட்டப்பட்டிருந்தது.

யாழ். மாநகர சபையின் முதல்வரான இ. ஆனோல்ட், மற்றும் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் ஆகியோர் இச் செயற்பாடுகளுக்குத் துணை நின்றனர்.

யாழ். மாநகர ஆணையாளரின் நடவடிக்கை தான்தோன்றித் தனமாகவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாவலர் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாகவும் அமைந்துவருவது வருத்தத்துக்குரியது.

கடந்த ஒரு சில நாள்களுக்கு முன்பு நாவலர் கலாசார மண்டபத்திலே நடைபெற்ற நிகழ்வொன்றுக்காக யாழ். மாநகர சபை ஆணையாளரின் உத்தரவின்பேரில் சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஒரு தேசிய வீரரை அவருக்கென்று அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்திலேயே அவமதிக்கும் விதத்தில் நாவலர் பெருமானின் திருவுருவப்படம் கழற்றப்பட்டு ஒரு மூலையில் போடப்பட்டது.

இந்த அநாகரிகச் செயற்பாட்டுக்கு உரிய தரப்பினரால் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் ஏற்கனவே இணங்கிய வகையில் நாவலர் கலாசார மண்டபத்திலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் சுதந்திரமான முறையில் நாவலர் பணியை முன்னெடுப்பதற்கும் யாழ் மாநகர சபை பொதுநூலகத்தை நாவலரது ஞாபகார்த்த நூலகமாக யாழ். மாநகர சபை செயற்படுத்துவதற்கும் உரியதரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆகவே நாவலர் கலாசார மண்டபம் உருவாக பலவழிகளிலும் துணைநின்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் எதிர்பார்ப்பை உரியவர்கள் மதித்து நடக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என நாவலர் சபையின் தலைவர் சின்னத்துரை தனபாலன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிச்சயமற்ற எதிர்காலத்தை நோக்கி தமிழர்கள்

வெடுக்குநாறி மலையில் இருந்த ஆதி சிவன் ஆலயம் முற்றிலுமாக அழிக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்றே மணற்கேணி சிவன் ஆலயமும் இடித்தழிக்கப்பட்டிருக்கின்றது. மற்றொரு பக்கத்தில் கச்சதீவில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு அரச மரம் வளர்க்கப்பட்டு அங்கும் பௌத்த அடையாளங்கள் உருவாக்கப்படுகின்றன. குருந்தூர் மலையில் நீதி மன்ற உத்தரவை மீறி தொல்லியல் இடத்தில் விகாரை ஒன்று முழுமையாகக் கட்டியெழுப்பப்படுகின்றது. யாழ்ப்பாணம், புத்தூர், நிலாவரையில் திடீரென ஒரு புத்தர் சிலை வைக்கப்படுகின்றது.

வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயப் பகுதி இப்போது ஒரு புத்த விகாரையாக கூகுள் வரைபடத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கச்சதீவில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதை ஒருவித சமாளிப்புடன் கடற்படை ஏற்றுக்கொள்கிறது. குருந்தூர் மலையில் சட்ட நியமங்களின்படி சென்று தமிழ் மக்கள் நீதியின் கதவுகளைத் தட்டுவதற்கிடையில் அங்கு எல்லாமும் முடிந்து போயிருக்கும்.

இப்படி திரும்பிய இடமெல்லாம் மூச்சுமுட்டும் அளவிற்குத் தமிழர்கள் பௌத்த சிங்கள பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பை உணர்கிறார்கள். இது 35 வருடங்களின் முன்னர் ஆயுதப் போராட்டங்களை ஊக்குவித்த களச் சூழலை ஒத்த நிலமையை உணர்த்தி நிற்கின்றது.

பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் ஆதரவின்றி அல்லது அதனது தலைமையிடமான மகா சங்கங்களின் ஆதரவின்றி ஆட்சி அதிகாரத்தில் தொடரமுடியாது என்று சிங்கள ஆட்சியாளர்கள் கருதுகின்ற வரைக்கும் இத்தகைய ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகத் தமிழர்கள் எதையும் செய்ய முடியாத நிலைமையே இருக்கின்றது.

சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும்கூட இவற்றைத் தடுத்து நிறுத்தும் வல்லமையைத் தமிழர்கள் இழந்துபோயிருக்கிறார்கள் என்பது கண்கூடு. 1980களில் ஆயுதப் போராட்டம் முகிழ்த்ததன் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த இந்தப் பணிகளை பௌத்த சிங்களப் பேரினவாதம் இப்போது மீண்டும் விட்ட இடத்திலிருந்து தீவிரப்படுத்தி வருகின்றமை கண்கூடு. ஆனால் அதைத் தடுத்து நிறுத்தும் வல்லமையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த வேறு எந்தவொரு அணுவுக்கும் இல்லை என்பதும் இப்போது நிரூபணமாகியிருக்கின்றது.

புலிகள் தமது ஆயுத மற்றும் வன்முறைப் பலத்தின் மூலம் 30 ஆண்டுகளாக வடக்கு கிழக்கை பௌத்த சிங்கள மயமாக்கத்தில் இருந்து பாதுகாத்தார்கள். இப்போது அத்தகைய எந்தவொரு அரசியல் சக்தியும் இல்லாத நிலையில் இன்னும் ஒரு தசாப்த காலத்தில் வடக்கு கிழக்கு முழுமையான பௌத்த மயப்படுவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாமல் போகும்.

இந்த விடயத்தை பன்னாட்டு அரங்கத்திற்குக் காவிச் செல்வதன் மூலம் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கைகளும் முழுமையாகச் சிதைந்துபோய்விட்ட நிலையில் தமிழர்களின் எதிர்காலம் இந்தத் தீவில் நிச்சயமற்றதாக மாறி வருகின்றது.

# சர்வதேச நாணய நிதிய கடனில் அரசு ஊழியர்களுக்குச் சம்பளம்

## அமைச்சர் பந்துல தகவல்



சர்வதேச நாணய நிதியத் திடம் இருந்து இலங்கை பெற்றுள்ள முதல் கடன் தவணையின் ஒரு பகுதி மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அரச ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்காக பயன்படுத்தப் படும் என திறைசேரி தெரிவித் துள்ளதாக அமைச் சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

'அரசு ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், கொடுப்பனவுகள் மற்றும் இதர அன்றாட செலவுகளை பராமரிப்பதற்கு 196 பில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்படும் மொத்த வருவாய் 173 பில்லியன் ரூபாவாகும். பின்னர் 23 பில்லியன் கொண்டு மார்ச் மாதத்தைத் தக்க வைக்க போதுமானதாக இல்லை. அவற்றிற்கு மேலதிகமாக 500 பில்லியனுக்கும் அதிகமான கடனைச் செலுத்த வேண்டியுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் இரண்டு மாத சம்பளம் வழங்கப்படவுள்ளது. அதாவது மார்ச் சம்பளம் மற்றும் ஏப்ரல் சம்பளமாகும். சர்வதேசநாணய நிதியத்திடம்பெறப்பட்ட கடனில் ஒரு பகுதி இந்த இரண்டு சம்பளத்தை செலுத்த பயன்படுத்தப் படும் என திறைசேரி தெரிவித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாணவர் மதிய உணவுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் கணவரின் பிறந்தநாள் கொண்டாடினாராம் அதிபர்

மதிரிகிரிய, மண்டலகிரிய மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலையின் பிள்ளைகளுக்கு காலை உணவிற்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட பணத்தை அதிபர் தனது கணவரின் பிறந்தநாள் நிகழ்விற்கு உணவு தயாரிப்பதற்காக பயன்படுத்தினார் எனப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பெற்றோர்கள் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் பிராந்திய மற்றும் மாகாண கல்வி அலுவலகங்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவுத் திட்டத்தின் கீழ், இந்தப் பள்ளியின் ஆரம்பப் பிரிவில் பயிலும் 720 மாணவர்களின் தினசரி உணவுக்காக ஒருவருக்கு ஒரு நாளைக்கு தலா 100 ரூபா வீதம் மொத்தமாக 72 ஆயிரம் ரூபா செலவிடுகிறது.

டிசெம்பர் 05, 2022 அன்று அதிபரின் கணவரின் பிறந்தநாள் விழாவிற்கு, உணவு ஒப்பந்தம் செய்தவர் பால் சாதம், கொக்கி, கட்லெட் மற்றும் பட்டாணி போன்றவற்றை சமைத்துள்ளார்.

மேலும் மாணவர்களின் உணவுக்காக ஒதுக்கப்பட்ட பணம் அதற்கு பயன்படுத்தப் பட்டது என்பதும் அறியப்படுகிறது.

சம்பவத்தன்று, மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட மாட்டாது என்றும், அன்றைய தினம் மாணவர்கள் வீட்டில் இருந்து சாப்பிட ஏதாவது கொண்டு வருமாறும் குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப் பட்டது.

ஆனால் அன்றைய தினம் மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டதாக வவுச்சரில் கையெழுத்திடப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்தப் பணத்தை எடுத்து அதிபர் செலவழித்து விட்டார் என்று பாடசாலை அபிவிருத் திச் சங்கம் தெரிவிக்கிறது. அதிபரின் கணவரும் அந்தப் பகுதியிலுள்ள வேறொரு பாடசாலையின் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

## படைப்பாக்க போட்டிகளில் யாழ்.பல்கலை முதலிடம்



அகில இலங்கை ரீதியில் பல்கலைக்கழகங்களிடையே நடைபெற்ற ஊடகப் படைப்பாக்கப் போட்டிகளில் யாழ்ப்பாணப்பல்கலைக் கழக ஊடகக்கற்கைகள் துறை முதலாம் இடத்தை பெற்றுள்ளது.

எட்டுப்பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில், நாற்பது இடங்களில் 25 இடங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பெற்றனர்.

ஹெல்வெற்றாஸ் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் அனுசரணையில், இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றத்தின் உதவியுடன் நடைபெற்ற இந்தப்போட்டிகளில் பேராதனைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜய-வர்த்தனபுர பல்கலைக்கழகம், தென் கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பன பங்குபற்றியிருந்தன.

துறைசார் நிபுணர்களாலும், ஊடகத் தொழில் வாண்மையாளர்களாலும் சுமார் ஒரு வருடமாகத் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட செயலமர்வுகள், பயிற்சிகள் ஆகிய-வற்றைத் தொடர்ந்து, நான்கு பல்கலைக்கழகங்களுக்கிடையே இந்தப்போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன.

பல்லூடகக் கட்டுரைகள், வலைப்பூக்கள், மொபைல் புகைப்படங்கள், டிஜிற்றல் கமெரா புகைப்படங்கள், கருத்துப் படங்கள் மற்றும் டூடுள் சித்திரங்கள், மொபைல் வீடியோ கதைசொல்லல், குறும் படங்கள், டிஜிற்றல் நாடகங்கள் ஆகிய எட்டு பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் தலா 5 போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களையும், 6 போட்டிகளில் மூன்றாம் இடங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் வெற்றி கொண்டனர்.

# நான் திருடன் அல்லன் மைத்திரி தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தீர்ப்பு தொடர்பான நட்டஈட்டை வழங்க இன்னும் மூன்று மாதங்களே உள்ளன என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பத்தேகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது நண்பர்களிடமிருந்து இயன்றளவு பணம் வசூலித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

'எனது ஆட்சிக் காலத்தில், நான் உலகின் நம்பிக்கையை வென்று ஜனநாயகத்தை நிலைநாட்டி, இதை ஒரு நல்ல நாடாக மாற்றும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, ஈஸ்டர் தாக்குதல்கள் நிகழ்ந்து அனைத்தையும் அழித்துவிட்டன. இப்போது 100 மில்லியன் செலுத்துமாறு எனக்கு உத்தரவிடப்பட்டுள்ளது, நான் திருட வில்லை அல்லது வெடிகுண்டு வீசவில்லை. இப்போதெல்லாம் எனக்குத் தெரிந்த நண்பர்களிடம் பணம் பெற்று கொண்டுள்ளேன்.

உங்களால் முடிந்தால், எனக்கு வழங்கப்பட்ட 6 மாத கால அவகாசத்தில் இருந்து 3 மாதங்கள் கடந்துவிட்டதால், முடிந்த தொகையை எனக்குக் கொடுங்கள். – என்று தெரிவித்துள்ளார். குறித்த காலத்துக்குள் இழப்பீட்டுத் தொகையை செலுத்த முடியாத பட்சத்தில் நீதிமன்றம் தமக்கு எதிராக என்ன தீர்மானத்தை எடுக்கும் என்பது தனக்குத் தெரியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# காணாமல்போனோரின் உறவுகள் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதியோம்

## சர்வ மக்கள் கட்சியின் தலைவர் உதயகலா அறிவிப்பு




காணாமல்போனோர் விளம்பரங்களை வைத்து வியாபாரம் செய்யவேண்டாம். காணாமல் போனோர் ஆர்ப்பாட்டங்கள் நடக்காது. இனி நடக்க விடவும் மாட்டோம் என சர்வ மக்கள் கட்சியின் தலைவி தயாபரராஜ் உதயகலா தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு கூறிய அவர், உண்மையான காணாமல்போனோரின் உறவுகளை சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், 'காணாமல்போனோர் விளம்பரங்களை வைத்து வியாபாரம் செய்யவேண்டாம். மீறிச்செய்தால் இதற்கான பின்விளைவுகளை சந்திக்க வேண்டி வரும். நாங்கள் நெருப்பு யாருக்கும் பயப்பட மாட்டோம் – என்றார்.

# கடலட்டைகளை கடத்த முயற்சித்த மூவர் கைது

இலங்கைக்கு இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக அனுப்பப்படவிருந்த பதப்படுத்திய கடலட்டைகளுடன் மூவர் தமிழக கடலோர பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை சட்டவிரோதமாக அனுப்பப்படவிருந்த ஒரு தொன் கடலட்டைகளை பறிமுதல் செய்த தமிழக பொலிஸார் கடற்றொழிலாளர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் கடல் கடலட்டைகளை அழித்து வரும் இனமாக வகைப்படுத்தியுள்ளது.

சீனா, இலங்கை, இந்தோனேசியா, ஜப்பான் மற்றும் வேறு சில தூர கிழக்கு நாடுகளில் கடலட்டை ஓர் உணவு மற்றும் மருத்துவத்துறை பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பொலிஸார் மற்றும் வனத்துறை அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்தியாவில் ஒரு மெற்றிக் தொன் கடலட்டையின் மதிப்பு 30 லட்சம் ரூபாவாகும். எனினும் இது இலங்கை அல்லது சீனா போன்ற நாடுகளுக்கு கடத்தப்பட்டால் அதன் மதிப்பு இந்தியாவின் மதிப்பை விட நான்கு முதல் ஐந்து மடங்கு அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, ராமநாதபுரம் கடற்கரையை ஒட்டியுள்ள கடல் பகுதியில் 10 வகையான கடலட்டைகள் இருக்கின்றன எனவும், அதில் ஆறு வகைகள் ஒரு லட்சம் முட்டையிடும் திறன் கொண்டவை என்றும் அகில இந்திய கடற்றொழிலாளர் பேரவை தலைவர் ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





## உக்ரைன் போருக்காக
# பெலாரஸில் அணு ஆயுதங்களை உடன் நிலை நிறுத்துகிறது ரஷ்யா
## அந்நாட்டு அதிபர் புடின் அறிவிப்பு

பெலாரஸில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்தப்போவதாக ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார். இது உலக நாடுகளிடயே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கை அணு ஆயுதப் பரவல் தடைக்கான ஒப்பந்தங்களை மீறும் வகையில் இருக்காது என்று புடின் கூறியிருக்கிறார்.

இந்த முடிவின் மூலம் உக்ரைனுக்கு ஆதரவு அளித்துவரும் நேட்டோ படைகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குப் புடின் எச்சரிக்கை விடுத்திருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

உக்ரைன் மீதான தாக்குதலுக்காக எங்களது அணு ஆயுதங்களை பெலாரஸில் நிலைநிறுத்தப் போகிறோம்.

இது புதிது அல்ல. கடந்த பத்து வருடங்களாக இதனை அமெரிக்கா செய்து வருகிறது. அமெரிக்கா தங்களுடைய அணு ஆயுதங்களை தங் களது நட்பு நாடுகளில் நிலை நிறுத்தியுள் ளது என்று தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதங்கள் தொடர்பான புடினின் இந்தப் பேச்சு குறித்து கருத்து தெரிவித்துள்ள அமெரிக்கா, அணு ஆயுதங்களை ரஷ்யா பயன்படுத்துவதற்கான எந்த அறிகுறியும் எங்களுக்குத் தெரியவில்லை என்று கூறியுள்ளது.

முன்னதாக, சீன அதிபர் ஜி ஜின்பிங் 3 நாட்கள் பயணமாக கடந்த வாரம் ரஷ்யா வந்திருந்தார். இந்தச் சந்திப்பில் இரு நாடுகளின் பரஸ்பர உறவுகள் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். இந்த ஆலோசனையில் உக்ரைன் உடனான ரஷ்யாவின் போர் விவகாரம் முக்கியத்துவம் பெற்றது. இரு நாட்டு வணிக உறவு குறித்தும் ஆலோசனை நடத்தினர் .

அவரது பயணம் முடிந்து அவர் வெளியேறியதும் ஆணு ஆயுதங்கள் குறித்து புடின் பேசி இருப்பது உலக நாடுகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையில் இணைய உக்ரைன் முடிவெடுத்தது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளுடனும் உக்ரைன் நெருக்கம் காட்டியது. இந்த நடவடிக்கைகளால் தங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூறி, உக்ரைன் மீது ரஷ்யா 2022 பெப்ரவரி மாதம் போர் தொடுத்தது.

இப்போரினால் உக்ரைனில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து இருக்கிறார்கள். ரஷ்யாவுக்கு எதிராக போர்க் குற்ற நடவடிக்கைகளை உலக நாடுகள் எடுக்கவேண்டும் என்று உக்ரைன் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# 2 விமானங்களின் நேரடி மோதல் அதிர்ஸ்டவசமாகத் தவிர்ப்பு



நேபாள தலைநகர் காத்மாண்டுவில் நடுவானில் ஏர் இந்தியா விமானமும், நேபாள் ஏர்லைன்ஸ் விமானமும் மோதும் அசம்பாவித சம்பவம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் தவறிழைத்த 3 அதிகாரிகள் உடனடியாகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை காத்மாண்டு விமான நிலையத்துக்கு கோலாலம்பூரிலிருந்து ஏர் பஸ் ஏ-320 ரக விமானம் வந்துகொண்டிருந்தது. அதே நேரத்தில் டெல்லியிலிருந்து காத்மாண்டுக்கு ஏர் இந்தியா விமானமும் வந்துகொண்டிருந்தது.

ஏர் இந்தியா விமானம் 19 ஆயிரம் அடி உயரத்திலிருந்து தரையிறங்கிக் கொண்டிருந்தது. அதேபோல் நேபாள் ஏர்லைன்ஸ் விமானம் 15 ஆயிரம் அடி உயரத்திலிருந்து அதே பகுதியில் தரையிறங்கிக் கொண்டிருந்தது. அப்போது இந்த விவரம் ரேடாரில் தெரிய வந்ததும், நேபாள் ஏர்லைன்ஸ் விமானத்தை இயக்கிய பைலட்டுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டு விமானத்தின் உயரம் 7,000 அடியாகக் குறைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 2 விமானங்களும் பத்திரமாகத் தரையிறங்கின.

இதனால் வானில் 2 விமானங்களும் மோதிக் கொள்ளும் அசம்பாவித சம்பவம் தவிர்க்கப்பட்டது. 2 விமானங்கள் ஒரே நேரத்தில் ஒரே பகுதியில் தரையிறங்கு-வதை கவனிக்காமல் பணியில் அலட்சியாக இருந்ததாக 3 அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று நேபாளத்தின் உள்நாட்டு விமானப் போக்குவரத்து ஆணைய (சிஏஏஎன்) செய்தித் தொடர்பாளர் ஜெகன்னாத் நிரூலா தெரிவித்தார். மேலும் இதுதொடர்பாக விசாரணை நடத்த விசாரணைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.




# பெலாரஸை பணயம் வைக்கின்றது ரஷ்யா
## உக்ரைன் குற்றச்சாட்டு

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் ஓராண்டை கடந்து நீடித்து வருகிறது.

உக்ரைன் முக்கிய பகுதிகளை கைப்பற்றி ரஷ்யா, தொடர்ந்து உக்கிரமான தாக்குதலை நடத்துகிறது.

இதற்கு உக்ரைன் இராணுவமும் தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகிறது. நட்பு நாடுகளிடம் இருந்து கிடைக்கும் ஆயுதங்களை கொண்டு உக்ரைன்ஈராணுவம் சண்டையிட்டு வருவதால் போர் நீடிக்கிறது.

இந்நிலையில் ரஷ்ய அதிபர் புடின், நட்பு நாடான பெலாரசில் முக்கியமான அணு ஆயுதங்களை நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நானும் பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகான்னெ கோவும் ஒப்புக்கொண்டோம் என்றும் புடின் தெரிவித்தார்.

இதையடுத்து, பெலாரசை அணு ஆயுதப் பணயக் கைதியாக ரஷ்யா வைத்திருப்பதாக உக்ரைனின் தேசிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளர் டேனிலோவ் குற்றம்சாட்டி உள்ளார்.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கையானது உள்நாட்டின் உறுதிப்பாட்டை நோக்கிய ஒரு நகர்வு என்றும், புடினின் அறிவிப்பு பெலாரஸ் மக்களிடையே ரஷ்யா மீதான எதிர்மறையான கருத்தை அதிகரிக்கச் செய்யும் என்றும் அவர் கூறினார்.

2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், பெலாரஸ் அரசு, ரஷ்ய படைகளை தனது நாட்டில் இருந்து உக்ரைன் மீதான படையெடுப்பைத் தொடங்க அனுமதி அளித்திருந்தது.

# வோஷிங்டனில் இந்திய தூதரகம் முன்பாக காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டம்

அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் உள்ள இந்திய தூரதகம் முன்பு இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் தனிநாடு கேட்டுப் போராடும் காலிஸ்தான் அமைப்பு ஆதரவாளர்கள் நேற்று போராட்டம் நடத்தினர்.

இந்திய தூதர் தரண்ஜித் சிங் சாந்துவை திட்டி வெளிப்படையாக மிரட்டல் விடுத்தனர். வன்முறையை தூண்டும் விதத்தில் அவர்கள் பேசினர். தாக்குதல் நடத்துவதற்காக மர குச்சிகளையும் அவர்கள் கொண்டு வந்திருந்தனர்.

வன்முறை ஏற்படவுள்ளதை உணர்ந்த அமெரிக்க சீக்ரெட் சர்வீஸ் அமைப்பினர் உள்ளூர் போலீஸாரை உடனடியாக வரவழைத்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தினர். இதையடுத்து 3 போலீஸ் வேன்கள் தூதரகம் முன்பு நிறுத்தப்பட்டது. தூதரகத்தின் தேசிய கொடிக்கம்பத்தை நெருங்க முயன்ற போராட்டக்காரர்களை, சீக்ரெட் சர்வீஸ் படையினர் அப்புறப்படுத்தினர்.

அமெரிக்காவின் சான் பிரான்ஸிஸ்கோ நகரில் உள்ள இந்திய துணை தூதரகத்தில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் கடந்த வாரம் ஞாயிற்றுகிழமை தாக்குதல் நடத்தினர்.

கனடாவிலும் இந்திய துணை தூதரகங்களுக்குள் புகுந்து காலிஸ்தான் ஆதரவாளர்கள் கடந்த வாரம் போராட்டம் நடத்தினர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி டெல்லியில் உள்ள கனடா தூதரை அழைத்து இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் அறிவுறுத்தியது. கனடாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கும்படி வெளியுறவுத்துறை அமைச்சகம் வலியுறுத்தியது.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தை பிரித்து காலிஸ்தான் என்ற பெயரில் தனி நாட்டை உருவாக்கும் முயற்சியில் வெளிநாடுவாழ் பஞ்சாபியர்களில் சிலர் முயன்று வருகின்றனர். இந்தியாவில் அவர்களுக்கு ஆதரவாக அம்ரித்பால் சிங் செயல்பட்டு வந்தார்.

சீக்கிய மத போதகரான அவர் மீது இருந்த வழக்குகள் தொடர்பாக அண்மையில் அவரைக் கைது செய்ய பொலிஸார் முயன்றபோது அவர் தப்பி ஓடிவிட்டார். அவரை தேடி பிடிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அம்ரித்பால் சிங் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை அடுத்து, வெளிநாடுகளில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு எதிராக போராட்டங்களை மேற்கொண்டனர். கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன.

# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை

வடகொரியா திங்கட்கிழமை மீண்டும் ஏவுகணைச் சோதனை நடத்தியுள்ளது. அமெரிக்காவும் தென்கொரியா-ாவும் கூட்டுப் படைப் பயிற்சிகளை நடத்தி வருவதைத் தொடர்ந்து வடகொரிய அண்மைய நாட்களில் தனது ஏவுகணைச் சோதனைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

வடகொரியாவுக்கும், தென் கொரியாவுக்கும் இடையே நீண்ட நாட்களாக எல்லைப் பிரச்சினை நீடித்து வருகிறது. தென் கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா இருந்து வருகிறது. தென்கொரியாவில் அமெரிக்கப் படைகளும் அந்த நாட்டுப் படைகளும் ஒன்றாக இணைந்து மிகப்பெரிய அளவிலான படைப்பயிற்சியினை மேற் கொண்டு வருகின்றன. இது வடகொரியாவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது. இதற்குப் பதிலடியாகவே வடகொரியா ஏவுகணைச் சோதனைகளை நடத்துகின்றது. இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 11 முறை சோதனைகளை நடத்தி உள்ளது. கடந்த வாரம் மட்டும் 7 ஆவது தடவையாக ஏவுகணைகளை வீசி சோதனை நடத்தியது.சில நாட்களுக்கு முன்பு நீருக்கடியில் அணு ஆயுத சோதனை மூலம் செயற்கையான சுனாமியை உருவாக்கியது. இந்த நிலையில் இன்று காலை வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயக்கூடிய 2 குறுகிய அளவிலான பாலிஸ்டிக் ஏவுகணைச் சோதனை நடத்தியதாக தென்கொரியா குற்றம் சாட்டி உள்ளது. கிழக்கு கடற்கரையை நோக்கி ஜுங்குவா மாகாண பகுதியில் நடந்த இந்தச் சோதனையின்போது தனது இலக்கை ஏவுகணைகள் தாக்கியதாக தெரிய வருகிறது. ஒருபுறம் வடகொரியா இதுவரை இல்லாத வகையில் ஏவுகணை சோதனை நடத்தி வருவதும், மறுபுறம் தென் கொரியா-அமெரிக்கா கூட்டுப்படையினர் மிகப் பெரிய அளவிலான பயிற்சியினை நடத்துவதாலும் கொரியா தீபகற்பம் பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.





# பாகிஸ்தானில் போராட்டம்

பாகிஸ்தானில் தொடர்ந்து நீடிக்கும் பல மணி நேர மின் வெட்டை எதிர்த்து மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்தி வருகின்றனர். பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. அந்நாடு கடனில் தத்தளித்து வருவதால் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அனைத்தும் விண்ணை முட்டும் வகையில் உயர்ந்துவிட்டன.

கோதுமை, தக்காளி, உருளைக்கிழங்கு, வாழைப்பழம் உள்ளிட்ட உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் அந்த பொருட்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்து விட்டது.

வாழைப்பழம் டசின் ரூ. 1000 முதல் ரூ.1500 வரை விற்பனை ஆகிறது. இதன் காரணமாக பொதுமக்கள் தவிப்புக்குள்ளாகி வருகின்றனர். தொடர் மின்வெட்டும் பொதுமக்களை பாடாய்படுத்தி வருகிறது. பெரும்பாலான நகர்புறம் மற்றும் கிராமபுறங்களில் இரவு 10 முதல் காலை 10 மணி வரை 12 மணி நேரம் வரை மின்சாரம் நிறுத்தப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி உள்ளனர். இதனால் பல பகுதிகள் இருளில் மூழ்கி உள்ளன. தற்போது ரமழான் பண்டிகையையொட்டி முஸ்லீம்கள் நோன்பு இருந்து வருகின்றனர்.

அவர்கள் இந்த மின் தடையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்த நிலையில் மின்வெட்டை கண்டித்து பொது மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டமும் நடத்த தொடங்கி உள்ளனர். நேற்று கைபர் பக்துங்கா மாகாணத்தில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர். மின் வெட்டைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

# உலகம் ஆப்கானை அங்கீகரிக்கவேண்டும்
## இம்ரான்கானின் ஆசை இது

உலக நாடுகள் ஆப்கானிஸ்தானை அங்கீகரிக்கவேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடந்து வருகிறது. இங்கு பெண்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன. அவர்களுக்கு கல்வி உரிமையும் மறுக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் தலிபான்களுக்கு பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் ஆதரவு தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:

தலிபான்களை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும். அவர்களை அங்கீகரிக்காத வரை பெண்களுக்கான கல்வி உரிமை, மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் தர மாட்டார்கள். சர்வதேச அமைப்புகளுக்குள் தலிபான்களை கொண்டு வந்தால்தான் கேள்வி எழுப்ப முடியும் இவ்வாறு அவர் கூறினார்.



# சீக்கிய குருத்துவாரில் நேற்று துப்பாக்கிச் சூடு
## இரண்டு பேர் காயம்



அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள சீக்கியர்கள் வழிபாட்டுத் தலமான குருத்துவாராவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்தனர். கலிபோர்னியா மாகாணம் சாக்ரமென்டோ பகுதியில்தான் ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

இது தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை செய்து வருகின்றனர்.

இது தொடர்பாக சாக்ரமென்டோ கவுன்ட்டி ஷெரீஃப் கூறுகையில், நடந்த சம்பவம் இரு தனி நபர்களுக்கு இடையேயான வெறுப்பின் காரணமாக நடந்துள்ளது. துப்பாக்கி குண்டு பாய்ந்த இருவருமே ஆபத்தான நிலையில் உள்ளனர்.

ஆகையால் இது வெறுப்பினால் நடந்த இனவாத குற்றம் ஏதுமில்லை என்று உறுதியாகிறது என்று தெரிவித்தார்.

அமெரிக்காவில் சீக்கிய குருத்து-வாராவில் நடந்த துப்பாக்கிச் சூடு பல்வேறு சந்தேகங்களை எழுப்பிய சூழலில் அது வெறுப்புக் குற்றமல்ல தனிநபர் பிரச்சினை என்பது உறுதியாகியுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.03.2023 இல் வெளியிடப்பெற்றது.